കവിത



AMULHAKALA AMSTERDAM LIBRARY RESEARCH CENTRE

For the health of one and all at home...

Tampcol is a Government undertaking. All its medicines are of very high quality. Using the best of herbs selected with great care, these are manufactured in a clean and hygienic way by following Siddha, Unani and Ayurveda systems. Crores of people have benefited using these medicines. In the Indian Medicine Wings of Government hosiptals, patients are given Siddha, Unani and Ayurveda medicines of Tampcol.

Our service will continue for ever
Tampcol - an institution that does great service for the wellbeing of the people.

Tampcol

(A Government of Tamil Nadu Undertaking)

Excellent preparations containing original herbs

FRONT COVER : "Philosopher in Meditation" - Oil painting by Rembrandt (Dutch)
BACK COVER : "Coniferous forest" - Oil painting by Ivan Shishkin (Russia)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சுவடு

STUDENTS UNION
இனி ஒரு விதி செய்வோம்
GSMC
2005

GOVT. SIDDHA MEDICAL COLLEGE - PALAI
FORTY YEARS (1964 - 2004)
40th Year

கல்லூரி மலர்
2004-2005

40ம் ஆண்டு மாணவர் பேரவை

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

படையல்

ஒவ்வொரு நாளையும்
எஞ்சியிருத்தலுக்கான
போராட்டமாய் மேற்கொண்டு
அன்றாடங்காய்ச்சிகளாகவும்
அரை வயிற்றுடனும்
கோடிக்கணக்கில்
வாழ்ந்து கொண்டிருக்கும்
மனிதர்களாகவே மதிக்கப்படாத
எம் மக்களை
இரக்கமும் கருணையுமற்று
எல்லா மனித நியதிகளையும்
அறத்தையும் துறந்து
சுரண்டிப் பிழைக்கும்
'மகத்தான' தொழிலாய்
மருத்துவம் இன்று
மாறிவிட்ட நிலையிலும்
ஒடுக்கப்பட்ட மக்களுக்கென்றே
தங்களின் வாழ்வை
அர்ப்பணித்துக்கொண்ட
மருத்துவர்களுக்கு...

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நன்றி!



40 ஆம் ஆண்டு மாணவர் பேரவையின் (2004-2005) ஆக்கப்பூர்வமான அனைத்து செயல்பாடுகளுக்கும், ஆதரவளித்து வரும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை சிறப்பு ஆணையர் திரு. M.F. ஃபாருக்கி I.A.S. அவர்களுக்கு மாணவர் பேரவை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நன்றி

40ஆம் ஆண்டு மாணவர் பேரவை (2004-2005) யின் அனைத்து ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து வரும் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், ஆசிரியப் பெருமக்கள் மற்றும் கல்லூரி ஊழியர்கள் அனைவருக்கும் மாணவர்பேரவை தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வாழ்த்துச் செய்தி

Dr.M.தினகரன் M.D.(S)
கல்லூரி முதல்வர்,

21.9.2005
பாளையங்கோட்டை

எமது கல்லூரியின் மாணவர் பேரவையினர் SIDDHA FEST '05 விழாவினை சிறப்பாக நடத்தி முடித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து தற்போது மாணவர் பேரவை வெளியிட இருக்கும் கல்லூரி ஆண்டு மலர் (2004 - 2005) சிறப்பாக அமையவும், மலரில் இடம் பெற்றுள்ள தகவல்கள் மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு பயனுள்ளதாக அமையவும் வாழ்த்துகிறேன்.

Dr.M.தினகரன் M.D.(S)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வாழ்த்துச் செய்தி

Dr. P.S. மீனாம்பாள்
கல்லூரி துணை முதல்வர்

22-09-05
பாளையங்கோட்டை

எமது கல்லூரியின் 40 ஆம் ஆண்டு மாணவர் பேரவையினர் பல ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்துள்ளனர். குறிப்பாக, சுனாமி நிவாரணப் பணிகளை செய்தனர். அதன் பின்னர் பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் சித்த மருத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கும் வகையில் **Siddha Fest '05** விழாவினை 2005-ஜீன் 14-19 வரை சிறப்பாக நடத்தினர். அதனைத் தொடர்ந்து தற்போது கல்லூரி ஆண்டு மலரினை வெளியிட இருக்கிறார்கள். அவர்களது பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

22/9/05

Dr. P.S. மீனாம்பாள் M.D.(s)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மாணவர் பேரவை
(2004-2005)

அலுவல் சாராத் தலைவர்.
Dr. M.தினகரன், M.D.(s)
முதல்வர்.

ஆசிரிய ஆலோசகர்.
Dr. P.S. மீனாம்பாள், M.D.(s)
துணை முதல்வர்.

ஆசிரிய ஆலோசக குழு.
Dr. R. தேவராஜன், M.D.(s)
Dr. P. சரோஜினி தேவி, M.D.(s)
Dr. S. மோகன், M.D.(s)
Dr. S. சுரேஷ் குமார், B.S.M.S.,
Dr. K. மல்லிகா, M.D.(s)
Mr.E. ஃபுல்டன் ஜோஸ் நியூமன்,
M.Sc., M.Phil.,

மாணவர் பேரவை
தலைவர்
N.கரிகாலன், V-B.S.M.S.,

பொதுச் செயலாளர்
S. பாஸ்கரன், V-B.S.M.S.,

துணைத் தலைவர்
K.மார்டின் தனேஷ்குமார், V-B.S.M.S.,
S. சண்முக பிரியா, VI-B.S.M.S.,

துணைச் செயலர்
E. சரவணன், V-B.S.M.S.,
V.K. உஷா, III-B.S.M.S.,

பொருளாளர்
D. முத்து குமார், V-B.S.M.S.,

மலர்குழு
S. விஜய் விக்ரமன், V-B.S.M.S.,
K. நடராஜன், V-B.S.M.S.,
P. சத்ய மீரா, V-B.S.M.S.,
S. பாஸ்கரன், V-B.S.M.S.,

அறிவியல் மற்றும்
இலக்கியத்துறை
M. நிர்மலா, V-B.S.M.S.,
C. ஈஸ்வரன், V-B.S.M.S.,

கலை மற்றும்
விளையாட்டுத்துறை
V. நிர்மலா, V-B.S.M.S.,
P. ஸ்ரீகணேஷ், IV-B.S.M.S.,
K. ரேவதி, IV-B.S.M.S.,
A. ஜான்ஸி ராணி IV-B.S.M.S.,

செயற்குழு
G. தேவி கௌந்தி, V-B.S.M.S.,
P. செல்வம், III-B.S.M.S.,
K. திவ்யா, III-B.S.M.S.,
S. ராமலிங்கம், II-B.S.M.S.,
S. ஸ்ரீதர் குமார், II-B.S.M.S.,
D. மேண்டல்லா, II-B.S.M.S.,
M. மதியழகன், I-B.S.M.S.,
P. வெண்ணிலா, I-B.S.M.S.,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

N.KARIKALAN
V-B.S.M.S.,

S.BASKARAN
V-B.S.M.S.,



K.MARTIN DANESH KUMAR
V-B.S.M.S.,

S.SHANMUGA PRIYA
IV-B.S.M.S.,

E.SARAVANAN
V-B.S.M.S.,

D.MUTHU KUMAR
V-B.S.M.S.,



S.VIJAY VIKRAMAN
V-B.S.M.S.,



K.NATARAJAN
V-B.S.M.S.,

P.SATHYA MEERA
V-B.S.M.S.,

M.NIRMALA
V-B.S.M.S.,

C.ESWARAN
IV-B.S.M.S.,



P.SRI GANESH
IV-B.S.M.S.,

V.NIRMALA
V-B.S.M.S.,

K.REVATHI
IV-B.S.M.S.,

A.JANSI RANI
IV-B.S.M.S.,

G.DEVI GOWNTHI
V-B.S.M.S.,

P.SELVAM
III-B.S.M.S.,

K.DIVYA
III-B.S.M.S.,

S.RAMALINGAM
II-B.S.M.S.,

S.SREEDHAR KUMAR
II-B.S.M.S.,

D.MAENDELLA
II-B.S.M.S.,

P.VENNILA
I-B.S.M.S.,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சட்டமன்ற உறுப்பினர் திரு.T.P.M.மைதீன்கான், திரு.அண்ணாமலை. I.F.S. ஆகியோர்
SIDDHA FEST '05 விழாவினை (14-06-05) துவக்கி

விழாவினை பொதுமக்கள் பார்வையிடுகின்றனர்.

மனித உடற்கூறு பற்றி விளக்கப்படுகிறது.

சித்த மருத்துவத்தில் பயன்பாட்டில் இருந்த அறுவை மருத்துவக் கருவிகளின் மாதிரிகள்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அட்டை விடுதல் முறை முதன்முறையாக இவ்விழாவின் மூலம் கல்லூரியில் அறிமுகப்படுத்தப்படுகிறது....

விழாவில் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.....

விழாமுடித்த நிறைவில் மாணவர்கள்...



சுனாமி (கன்னியாகுமரி) நிவாரணப் பணியில் மாணவர் பேரவையினர் மற்றும் முதுகலை பயிலும் மருத்துவர்கள்...

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

IMPCOPS
ESTD. 1944

இம்ப்காப்ஸ்

(பொன்விழா கண்ட நிறுவனம்)

34-37, கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை, திருவான்மியூர்,
சென்னை - 600041.
Ph: 24911029, 24911189, 4917344 Fax: 044-4913313,
P.B.No.8602, Grams : DASAMULA

பொன்விழா ஆண்டு கண்டு உலக அளவில் தன்னிகரற்று விளங்கும் கூட்டுறவு நிறுவனம் எமது இம்ப்காப்ஸ் மட்டுமே. இதன் குறிக்கோள் இந்தியமுறை மருந்துகளான சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளை மிகவும் தரம் வாய்ந்த வகையில் தயாரித்து மக்களின் பிணி தீர அவர்களுக்கு வழங்குவதே ஆகும்.

"பாரகம் யாவம் பசிப்பிணி அடங்கலம்
ஆதிரை இட்டனர் அரும்பசி அருகவென"

என்ற சாத்தனாரின் எண்ணம் போல மக்களின் நோய்ப்பிணி தீர இம்ப்காப்ஸ் தனது தரமான தயாரிப்புகள் மூலம் மக்களின் பிணி அறவே செயல்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. எனவே பொதுமக்கள், மத்திய, மாநில அரசு மருந்தகங்கள் மற்றும் அவை சார்ந்த மருந்தகங்கள் எமது தயாரிப்புகளை பயன்படுத்த அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மருத்துவ உலகில் எமது அரிய சாதனைகளில் சில

சிறந்த ஞாபக சக்திக்கு - வல்லாரை மாத்திரை
பெண்களின் முகத்தின் அழகை கூட்ட - குங்குமாதி லேபம்
பெண்களின் அழகான கூந்தலுக்கு - நீலிபிருங்காதி தைலம்
என்றும் இளமையாக திகழ - ச்யவனப்பிராச லேகியம்
கட்டுடல் மிளிர - தேற்றான்கொட்டை இளகம் மற்றும்
அஸ்வகந்தாதி லேகியம்

இவற்றுடன் சாஸ்த்தீரிய அடிப்படையில் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்படும் தங்கபஸ்பம் எம்மிடம் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு எங்களது அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களை அணுகவும். மருத்துவ ஆலோசனைக்கு எமது நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள மருத்துவமனையை அணுகவும்.

Dr.V.R. சேஷாத்திரி, B.Sc., B.S.A.M
செயலாளர்

Dr. குமாரதாஸ் B.I.M, M.L.A.,
தலைவர்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மருத்துவம் என்பது ஒரு சமூக விஞ்ஞானம்.
அரசியல் என்பது மிகப்பெரிய, பரந்த
அளவிலான மருத்துவம் அன்றி வேறல்ல.

-ருடால்ஃப் விர்ச்சோ.

(ஜெர்மானிய மருத்துவர், செல்லியல் ஆய்வாளர், சமூக மருத்துவத்தின் நிறுவனர் என அழைக்கப்படுபவர்.)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கிராமப்புற மக்களின்
மருத்துவப்பிரச்சனைகளும்
தீர்வை நோக்கிய பாதைகளும்

-மருத்துவர். வீ.புகழேந்தி. M.B.B.S.,

"மக்களின் சுகாதாரத்திற்கென செலவிடப்படும் பணம்
பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு முதலீடு"

நல்ல சுகாதாரம் என்பது பொருள் உற்பத்தி செய்வதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் தேவையான ஒன்று. இந்தியா போன்ற ஏழை (ஆக்கப்பட்ட) நாடுகளில் பெரும்பாலான ஏழை மக்களின் முக்கிய சொத்தாக உடம்பு /அதன் மூலமான உழைப்பு திகழ்வதால் இங்கு நல்ல சுகாதாரத்தின் தேவை கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

"மக்களின் சுகாதாரத்திற்கென செலவிடப்படும் பணம் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு முதலீடு" என்கிறார் உலக சுகாதார நிறுவனத்திற்கான தலைவர்களில் ஒருவரான ஜெப்ரி.

"சுகாதாரத்துறை மக்களது சுகாதாரத்தை மட்டும் காப்பது போதுமானதல்ல. மக்கள் நோய்வாய்ப்படும் போது ஏற்படும் செலவுகளுக்கும் அது பாதுகாப்பு / உத்திரவாதம் வழங்கிட வேண்டும்" என்பது Dr. பிரண்ட்லாண்ட் (மேலாளர், WHO) அவர்களது சரியான வாதம். ஆனால், கீழே தரப்பட்டுள்ள நம் நாட்டின் உண்மை நிலவரம் ஆழ்ந்த கவலை தருவதாக அமைகிறது.

கிராமப்புறங்களின் அவலநிலை:


80%+
இந்தியாவில் 80% மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர். ஆனால் 80% மருத்துவ வசதிகள் நகரங்களில் தான் உள்ளன.
மருத்துவ படுக்கைகள் (Hospital beds)/மக்கள் தொகை - 15 மடங்கு
மருத்துவர்கள்/ மக்கள் தொகை - 6 மடங்கு
அரசு சுகாதாரத்திற்கென செலவிடப்படும் பணம் - 7 மடங்கு
நகர்ப் புறங்களைக் காட்டிலும், கிராமப் புறங்களில் குறைவாக உள்ளது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கிராமப்புறங்களை பொறுத்தவரை அரசு சார்பில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary Health Centres, PHC) மற்றும், துணை சுகாதார நிலையங்கள் (Sub Centres) மட்டுமே செயல்படுகின்றன. இந்தியாவில் ஏறக்குறைய 24,000 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 1,40,000 துணை சுகாதர நிலையங்களும் உள்ளன.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்:

1. 38% ல் தான் போதிய மருத்துவ பணியாளர்கள் உள்ளனர்
2. 34%ல்தான் பிள்ளை பேற்றினை (DeliveryServices) கவனிக்க முடியும்.
3. 3% ல் தான் பாதுகாப்பான கருக்கலைப்பு செய்யும் வசதி உள்ளது.
4. 10க்கு 8ல் குழந்தை மருத்துவர்கள் கிடையாது. 10க்கு 7ல் குழந்தை பிறப்பு நிபுணர் (Obsteetrician) கிடையாது.
5. 10க்கு 8ல் பிள்ளைப் பேற்றின் போது தேவைப்படும் அத்தியாவசியமான மருந்துகள் (Essential obstetric care drug kit) இருப்பதில்லை.

மருத்துவ பணியாளர்களின் உதவியுடன் (Attended Births) நடக்கும் பிரசவம் பணக்காரர்களை விட ஏழை மக்களிடத்து 2 1/2 மடங்கு குறைவாக உள்ளது.

தனியார் மருத்துவமனையை 39% ஏழை மக்களும், 77% பணக்கார மக்களும் பயன்படுத்துவதாக புள்ளி விபரங்கள் உள்ளன. தனியார் துறையில் உள்நோயாளிக்கான சிகிச்சை செலவு கிராமப் புறங்களில் அரசுத் துறையோடு ஒப்பிடுகையில் 2.1 மடங்கு அதிகமாகவும், நகர்ப்புறங்களில் 2.4மடங்கு அதிகமாகவும் உள்ளது.

The National Counsil For Applied Economic Research (NCAER) என்ற நிறுவனம் செய்த ஆய்வில், ஏழை கிராமப்புற மக்கள் அரசு மருத்துவமனைகளில் சரியாக கவனிக்கப்படுவதில்லை என்பது தெரியவந்துள்ளது.

பல கிராமங்களுக்கு அருகில்

*அரசு மருத்துவமனைகள் இருப்பதில்லை.
*இருந்தால் மருத்துவர்கள் சரியாக வருவதில்லை.
*மருத்துவர்கள் வந்தாலும் மருந்துகள் இருப்பதில்லை

மருந்துகள் இருந்தால், அவற்றில் நல்ல மருந்துகள் மேல் சாதி/ வர்க்க மக்களுக்கு, மருத்துவர், மருந்து கொடுப்பவர், செவிலியர், பிற மருத்துவமனை பணியாளர்களுக்கு தெரிந்தவர்களுக்கு மட்டுமே பெரும்பாலும் கிடைக்கும் நிலை இருந்து வருகிறது.



AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அரசு மருத்துவர்கள், தனியாக மருத்துவமனை வைத்து சிகிச்சை அளிப்பதால், அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளை சரிவர கவனிப்பதில்லை. இதனால் ஏழை மக்கள் இவற்றின் மீது நம்பிக்கை இழந்து 82% புறநோயாளிகள் தனியார் துறையை நாடிச் செல்லும் போக்கே தென்படுகிறது.



தனி ஒருவருக்கு முறையான சிகிச்சை கிடைப்பது, அவரது தேவையை ஒட்டி அமைய வேண்டுமே ஒழிய, அவரால் சிகிச்சைக்கு எவ்வளவு பணம் கொடுக்க முடியும் என்பதை ஒட்டி அமையக்கூடாது.

இந்திய அரசியல் சாசனமும், சட்டங்களும், இதைத் தான் சொல்கின்றன. இந்திய சுகாதரத் துறை, உலக அளவில் ஒப்பிடுகையில் பெருமளவு தனியார் மயமாக்கப்பட்டது என்பதை சொல்லியாக வேண்டும்.

கர்ப்பமுற்ற பெண்களின் இறப்பு விகிதம்

நகர்ப்புறம் - 267

கிராமப்புறம் - 619

மன்னிக்க முடியாத குற்றமாக பலராலும் பேசப்படுகிறது.

MMR

1991-92ல் - 424/ 1,00,000 Live births என இருந்தது.

1997-98ல் - 540/ 1,00,000 Live births ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் 1,30,000 பெண்கள் ஒவ்வொரு வருடமும் குழந்தை பிறப்பு/பேறு கால பிரச்சனையின் காரணமாக இறக்க நேர்கிறது.

இந்தியாவில் 18 லட்சம் குழந்தைகள் 5 வயதினை எட்டுவதற்கு முன், ஒவ்வொரு வருடமும் இறக்கின்றனர். இவற்றில் பெரும்பாலான இறப்புகள் தவிர்க்கக் கூடியன (Avoidable) (பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், உரிய நேரத்தில் முறையான, எளிமையான சிகிச்சை கொடுத்தல், சத்துக் குறைவை போக்குதல் முதலியவை மூலம்)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இந்தியாவில்

74% குழந்தைகள்	இவர்களில்	41.9% அதிக வருமானம் உள்ளவர்கள்
52% பெண்கள்		60.2% குறைந்த வருமானம் உள்ளவர்கள்

இரத்தசோகையால் பாதிக்கப்பட்டிருப்பது, நிலவும் வறுமை மற்றும் பெண்ணடிமைத் தனத்தை தோலுரித்துக் காட்டுகிறது.


சுகாதாரக் குறைவு → வேலைக்குச் செல்ல இயலாமை
வருமானம் குறைதல் + மருத்துவ செலவு (அதற்காக கடன் வாங்குதல்)
மருத்துவக் கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நிலை - குறைந்த வருமானக் குடும்பம்.
வறுமை வலை
குறைந்த வருமானத்தால் விரைவில் குணம் அடைய முடியாத நிலை,
குறைந்த உழைப்பு சக்தி, குறைந்த வருமானம்,

International Institute of Population Science (IIPS) 1995ல் செய்த ஆய்வில் 29% ஆண்கள் 39% பெண்கள் நிமோனியா நோய் அறிகுறி தென்பட்ட போதிலும், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படவில்லை என கூறுகிறது.

1. அடிப்படைக் கல்வி
2. மருத்துவ வசதி
3. சமுதாயத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு
4. நிலச் சீர்திருத்தம்
5. சமுதாய மாற்றத்தில் வளர்ச்சி

இவற்றில் இந்திய அரசின் பங்களிப்பு போதுமானதாகவும், சரியான செயல்திறன் கொண்டவையாகவும் இல்லை - அமர்தியா சென்.

சுவடு 4

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

குழந்தை இறப்பு விகிதம் 1998 - 1999

(உயிருடன் பிறக்கும் 1000 குழந்தைகளுக்கு)

1வயதிற்கு கீழான குழந்தைகள் இறப்பு விகிதம்

நகர்ப்புறம் - 45

கிராமப்புறம் - 83

குறியீட்டளவு	தலித்	பிற்படுத்தப்பட்டோர்	பிற
பிறந்தவுடன் இறக்கும் குழந்தை	83 (88)	76 (82)	61.8 (69)
சிறு குழந்தை இறப்பு (ஒரு வயதிற்கு கீழ்)	39.5	29	22.2
5 வயது வரை குழந்தை இறப்பு	119	103	82

ஆக இந்தியாவில் நோயால் அதிகம் பாதிக்கப்படுவதும் இறப்பதும் கிராமப்புற தாழ்த்தப்பட்ட / அடித்தட்டு மக்களே.

CEHAT ஆய்வில் 1986-1995 இடைப்பட்ட காலத்தில், பொருளாதார காரணத்திற்காக மருத்துவ உதவி பெற முடியாத நிலை இரட்டிப்பாக உயர்ந்துள்ளது.

1. நகர்ப் புறங்களில் 10ல் இருந்து 21 சதவீதமாகவும்,
2. கிராமப் புறங்களில் 15ல் இருந்து 24 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.

கிராமப்புறங்களில், கடன் வாங்குவதற்கு 2வது பெரும் காரணியாக இருப்பது மருத்துவச் செலவுகளே.

40% மக்கள் மருத்துவ செலவிற்காக கடன் வாங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது(உலகவங்கி ஆய்வின் முடிவு 35%). இத்தகைய கடன் காரணமாக ஒவ்வொரு வருடமும் 2 கோடிக்கு மேற்பட்ட இந்தியர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் தள்ளப்பட்டு வருகின்றனர்.

1. ஏழைகள் சுகாதாரத்திற்கென செலவிடும் விகிதம் அவர்களின் மொத்த வருவாயில் 12%
2. பணக்காரர்கள் சுகாதாரத்திற்கென செலவிடும் விகிதம் அவர்களின் மொத்த வருவாயில் 2% ஆக உள்ளதென தெரிய வந்துள்ளது.

தாழ்த்தப்பட்ட / பழங்குடி மக்கள் (SC/ST), மக்கள் தொகையில் 22% ஆக இருந்தும், அவர்களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர் என்பதும், அவர்களில் 81% நிலமற்ற, வேறு எந்த வசதியும், பொருளும் அற்ற கூலித் தொழிலாளர்கள் என்பதும் புள்ளி விபரங்களாக உள்ளன.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

விலைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மருந்துகளை 75ல் இருந்து 25 ஆகக் குறைத்து, மருந்தின் விலையை நிர்ணயம் செய்ய மருந்து குழுமங்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்துள்ளது அரசு, இதன் மூலம் சில மருந்துகளால் கிடைக்கும் இலாப விகிதம் 200% - 500% ஆக உள்ளது.

தமிழ்நாட்டின் நிகர வருவாயில் மருத்துவம் / சுகாதாரத்திற்கென சுமார் 1.81%, பொதுசுகாதாரத்திற்கென சுமார் 2.99% செலவழிக்கப்படுவதாக 2001-2002 நிதிநிலை அறிக்கை கூறுகிறது. இது போதுமானதல்ல.

மக்களிடம் நோய் மற்றும் நிவாரணம் பற்றிய அறியாமையானது, அவர்களது சாதாரண வியாதிகளுக்குக் கூட தேவையற்ற பரிசோதனைகள், ஊசிகள், சிரப், டானிக்குகள், மாத்திரைகள் போன்றவற்றை திணிப்பதற்கும் செலவுகளை பன்மடங்கு உயர்த்துவதற்கும் ஏதுவாக அமைந்து வருகிறது. இதைத் தடுக்க முறையான கண்காணிப்பு இல்லாதது பெரும் குறையாக உள்ளது.

தேசிய மனித மேம்பாட்டு அறிக்கை 2002ன் படி கிராமப்புற மக்களில் 9.48% பேர், நகர்புற மக்களில் 63.85% பேர் மட்டுமே கழிவறைகளைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். 45% மக்கள் ஒரு நாளைக்கு ரூ45 க்கும் குறைவாகவே ஊதியம் பெறுகின்றனர். 47% குழந்தைகள் போதிய ஊட்டச்சத்து இல்லாமல் வளர்ச்சியும், எடையும் குறைந்து காணப்படுகின்றனர்.

கிராமப்புற மருத்துவமனை - எனது அனுபவங்கள்

கிராமங்களில் மருத்துவ சேவை மேற்கொண்டு அதன் மூலம் பெற்ற அனுபவங்களைக் கொண்டு இத்தகைய பிரச்சனைகளுக்கு எவற்றைத் தீர்வாகக் காட்ட இயலும் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தீர்வுகள் (அதற்கான பாதைகள்) மருத்துவ துறையோடு பிற தளங்களிலும் விரவி இருப்பதால் அவற்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இனி அதுபற்றி.....

முதலில் மருத்துவச் செலவை குறைக்கும் குறுகியகால திட்டம் பற்றி காணலாம்.

சூழலுக்கு ஏற்ற சரியான / முறையான மருத்துவத்தை குறைந்த செலவில் நல்ல தரத்துடன் கிராம மக்களுக்கு அளிக்க முடியும். **(Appropriate Health Care at an affordable price in a rural set-up.)**

இது எவ்வாறு?

உலக சுகாதார நிறுவனம் (WHO) கூற்றுப்படியே கிராமங்களில் உள்ள பெரும்பாலான 80% வியாதிகளை சாதாரணமாக மருத்துவர் மூலமோ, அல்லது அவர்கள் மூலம் பயிற்றுவிக்கப்பட்ட, ஆர்வமுள்ள, வேலையற்ற, ஓரளவு படித்த, சமூகக் கண்ணோட்டமுள்ள, கிராமப்புற இளைஞர்கள் (ஆண்/பெண்) மூலமோ சரி செய்ய முடியும். இப் பெரும்பாலான, பொதுவான வியாதிகளை ஆங்கில மருத்துவத்தில் நான்கு விதமான மருந்துகளைக் கொண்டு சரி செய்யலாம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அவை

1. சத்து மாத்திரை (Vitamins, Minerals, Nutrients)
2. வலி நிவாரணிகள் (Pain Killers)
3. கிருமிக் கொல்லிகள் (Antibiotics)
4. ஒவ்வாமை மருந்துகள் (Anti - Allergics)

பல சமயம் ஒரே மருந்தே மாத்திரை, ஊசி, டானிக் வடிவத்தில் உள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். (உதாரணம்: அவில் (Avil) அரிப்புக்காக கொடுப்பது.)

மேலும் ஒரே மருந்து பல மருந்துக் குழுமங்களால், பல பெயர்களில், பல வடிவங்களில், பல நிறங்களில், பல உருவங்களில், பல உறைகளில் வருவதால் நிறைய மருந்துகள் உள்ளதெனும் எண்ணத்தை ஏற்படுத்தலாம். (உதாரணம்: பாராசிட்டமால் (Paracetamol) என்னும் ஒரே மருந்து கால்பால், பெபானில், மெட்டாசின், குரோசின் போன்ற பெயரில் வருகிறது.)

எழுத்துக்கள் ஆங்கிலத்தில் இருப்பதால் சாதாரண மக்கள் புரிந்து கொள்வது இன்னும் சற்று கடினமாக உள்ளது. மேலும் ஒவ்வொரு வகையிலும் குறைந்த வீரியம், நடுத்தர வீரியம், அதிக வீரியம் என இருப்பதாலும் நிறைய மருந்துகள் பயன்படுத்தப்படுவதாக எண்ணத் தோன்றும். இவை அனைத்தும் தேவையற்ற பயங்களே/கற்பனைகளே.

எளிதில் புரிந்துகொள்ள என்ன செய்யலாம்?

பயிற்சி பெறுபவர்கள் சில அடிப்படைக் கருத்துக்களை அறிந்திருக்குமாறு செய்தல் வேண்டும். அதுவே அவர்களுக்கு மன உறுதியைக் கொடுத்து நாமும் மருத்துவத்தை எளிதில் புரிந்து கொண்டு, வியாதிகளுக்கான சிகிச்சையை நம்பிக்கையோடு அளிக்க முடியும் எனும் எண்ணத்தை உண்டாக்கும். உதாரணம்: புண் என ஒருவர் வரும்போது (அடிபட்டோ, முள்குத்தியோ, தீப்புண்ணாகவோ இருக்கலாம்) அதற்கு புண்ணை ஆற்றுவதற்கான மருந்து + வலி மருந்து, சுரம் இருந்தால் சுரமருந்து + வைட்டமின் சத்து மருந்து என்றே அனைத்து மருத்துவர்களும் மருந்தைக் கொடுப்பார்கள். சில மருத்துவர்கள் மாத்திரையாக மட்டுமே கொடுக்கலாம். சிலர் ஊசி சேர்த்துக் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு இதனையே சிரப் (Syrup) வடிவில் கொடுக்கலாம். சிலர் குறைந்த வீரியம், சிலர் நடுத்தர வீரியம், சிலர் அதிக வீரியம் எனக் கொடுக்கலாம். ஆனால் அடிப்படையில் கிருமிக் கொல்லி + வலி மருந்து + சத்து மருந்து என்பவை மட்டும் தான் கொடுக்கப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதே போல் வயிற்றுப் புண்ணுக்கு (அமிலம் அதிக சுரப்பதால் ஏற்படுகிறது - Ulcer or Acid peptic Disease) பெரும்பாலும் இரண்டு வித மருந்துகள் தான் பயன்படுத்தப்படுகின்றன.

1. அமிலத்தை நீர்த்துப் போகச் செய்யும் மருந்துகள்:(Acid netralizers) Digene, Gelusil முதலியன.
2. அமிலம்சுரப்பதைக் கட்டுப்படுத்தும் மருந்துகள்: (Acid blockers) Ranitidine, Omeprazole, pantoprazole போன்றவை. இவைதான் மாத்திரையாகவோ, டானிக்காகவோ,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஊசியாகவோ, வீரியம் கூட்டியோ, குறைத்தோ கொடுக்கப்படுகின்றன. (சமீபமாக சிலவகை வயிற்றுப் புண்களுக்கு கிருமிகள் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு கிருமிக்கொல்லிகள் சேர்த்து தரப்படவேண்டும்).

ஆங்கில மருந்துகள் அனைத்தும் வியாதிக்கான அடிப்படைக் காரணங்களைப் போக்காமல், வெறும் தற்காலிக நிவாரணம் மட்டுமே தருவன என்பது கீழ் எழுதப்பட்ட வரைபடத்தை கூர்ந்து கவனித்தால் தெளிவாக புரியும்.

நோய்களின் சமுதாய பின்னணி



AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சுவாச காசம் (Asthma) நோயில் மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. காரணம்:

1. மூச்சுக் குழல் சுருங்கிக் கொள்கிறது.
2. சளி அதிகமாக சுரந்து மூச்சுக் குழலை அடைத்துக் கொள்கிறது.

இதற்கும் இருவித மருந்துகளே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

1. மூச்சுக் குழலை விரிவடையச் செய்யும் மருந்துகள் (Deriphyllin, Salbutamol)
2. சளி சுரப்பதை கட்டுப்படுத்தும் மருந்துகள் (Prednisolone, Betamethasone)

இவ்விரு மருந்துகள் பலவிதமான வீரியங்களை மட்டுமே கொண்டிருக்கும்.

இவ்வாறாக புரிந்து கொண்டால் மருத்துவத்தில் ஏகப்பட்ட மருந்துகள் என்ற பொய்மையை நம்பத் தேவையில்லை. இந்த மருத்துவத்தை/ மருந்தை எளிதாக கற்று, தானும் மருத்துவர் துணையின்றி சிகிச்சை கொடுக்க இயலும் எனும் நிலையை எளிதில் பயிற்சி பெறுபவர்கள் ஒவ்வொருவரும் அடைந்து விடுவர். மேலும் மருத்துவமனையில், கூட இருந்து திரும்பத் திரும்ப பார்க்கும் போது எளிதில் பொதுவான வியாதிகளை தாமும் அறிந்து சிகிச்சை அளிக்க முடியும் என்னும் நம்பிக்கையை பெறுவர். அதற்கு 3 - 6 மாத கால பயிற்சியே போதுமானது.

பின்னர் மருத்துவ உதவியாளர்களை மருத்துவர் இருக்கையில் அமரவைத்து எதிரில் அமர்ந்துகொண்டு அவர்கள் சிகிச்சை செய்யும் போது தவறு ஏதாவது இருப்பின் சுட்டிக் காட்டும் போது அதை அவர்கள் தெரிந்து கொண்டு மீண்டும் தவறுகள் நிகழா வண்ணம் செய்யமுடியும்.

ஆக ஒரு கிராமத்தில் உள்ள பெரும்பாலான வியாதிகளை அந்தக் கிராமத்தில் உள்ள இளைஞர்களுக்கு கற்றுக் கொடுத்து அவர்களை அவ்வியாதிகளை சரிசெய்ய முடியுமாறு செய்து காட்ட முடியும். இது எனது அனுபவத்தில் உறுதியாகியுள்ளது.

மருத்துவ செலவை எப்படிக் குறைக்கலாம்?

மருந்துகளை பொறுத்த மட்டில் மொத்த விலைக்கும் சில்லறை விலைக்கும் பெருத்த விலை வித்தியாசம் உள்ளது. (உதாரணம் வயிற்றுப்புண்ணைப் போக்க பயன்படும் - Omeprazole - எனும் மருந்து, கடையில் 1மாத்திரை விலை ரூ.4.00 ஆகவும், மருத்துவர் மொத்தமாக வாங்கினால் 1 மாத்திரை 70 பைசாவாகவும் இருப்பதிலிருந்து எவ்வளவு இலாபம் மருந்து கடைகளுக்கு செல்கின்றது என புரிந்து கொள்ளலாம். ஆக தரமான மருந்துகளை மருத்துவரே மொத்தமாக வாங்கி அம்மருந்துகளைக் குறைந்த விலையில் தனக்கான இலாபத்துடன் கூட கொடுக்க முடியும். (நான் Omeprazole 1 மாத்திரை ரூ.2க்கு கொடுக்கிறேன்).

தேவையான மருத்துவ அறிவினைப் பெறுவதன் மூலம் தேவையற்ற ஊசிகள், டானிக்குகள், மாத்திரைகள், பரிசோதனைகள் தவிர்க்கப்படுவதால், தேவையற்ற பணவிரயங்களைக் குறைக்க முடியும்.நவீன மருத்துவத்தில் உள்ள பிரச்சனைகளை உணர்ந்து அதை ஈடுகட்டபிற மருத்துவமுறைகளில் (சித்த, ஹோமியோபதி) உள்ள விலை குறைந்த, எளிதில் கிடைக்கக் கூடிய, பின்விளைவுகள் அற்ற மருந்துகளையும் பரிசோதித்து பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்தலாம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பயிற்சி பெற்றவர்கள் கிராமங்களிலேயே இருப்பதால் (மக்களுக்கு நன்கு பரிச்சயமானவர்கள் கூட) சிகிச்சைக்கென பிற இடங்களுக்குச் செல்வதால் ஏற்படும் பிரயாணச் செலவு + உணவு போன்ற இதரச் செலவுகள் தவிர்க்கப்படுகின்றன.

பொதுவான பெரும்பாலான வியாதிகளைக் கண்டறிய கேள்வி ஞானமே பொதுமானது. பரிசோதனைகள் தேவையில்லை. இதன் மூலமும் தேவையற்ற செலவுகள் தவிர்க்கப்படுகின்றன.

எனது மருத்துவமனை என்பது ஒரு கூட்டு முயற்சி. நண்பர்கள் மூலம் கிடைத்த சிறு தொகையைக் கொண்டே (ரூ.5000) மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு, இன்றளவும் அது சுயசார்போடு இயங்குவதில் அனைவரும் பெருமிதம் கொள்கிறோம்.

1. கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து பெரும்பாலான வியாதிகளை அவர்களை வைத்தே மக்களுக்கு சிகிச்சை அளித்து அவற்றை சரி செய்ய இயலும்.
2. மருந்து மொத்தவிலை / சில்லறை விலை வேறுபாட்டை பயன்படுத்தி செலவை குறைக்க முடியும்.
3. தேவையற்ற ஊசி, டானிக், மாத்திரை, பரிசோதனைகளை தவிர்த்து செலவை குறைக்க முடியும்.
4. மாற்று மருத்துவத்தில் உள்ள நல்ல அம்சங்களை பயன்படுத்தல் மூலம் செலவு குறைப்பும் சாத்தியமே.

இதை ஒரு முன்மாதிரியாக (Model) பயன்படுத்தி பிற கிராமங்களிலும் நடைமுறைப்படுத்த இயலும் என நம்புகிறேன்.

ஒருவருக்கு நோய் வருவதற்கான பிரதான காரணம் நோய் எதிர்ப்புசக்திக் குறைவே, கிருமிகள் அல்ல.

நான் மருத்துவராக பணியாற்றுகையில் காசநோய் (TB) பிரிவில் பணியாற்றி உள்ளேன். இருப்பினும் என்னை காசநோய் பாதிக்கவில்லை. ஆக நோய் எதிர்ப்பு சக்தி இருந்தால், கிருமிகள் உடம்பினுள் புகுந்தாலும் நோயினை ஏற்படுத்த முடியாது. இதிலிருந்து வியாதி வர நோய் எதிர்ப்புசக்தி குறைவே பிரதான காரணம்; கிருமிகள் அல்ல என தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

நோயிலிருந்து விடுபட பிரதானக் காரணம் ஒவ்வொருவர் உடம்பின் நோய் எதிர்க்கும் திறனே, மருந்துகள் அல்ல.

உதாரணமாக காலராவை எடுத்துக் கொண்டால், அது ஒரு எல்லையைத் தாண்டி விட்டால் அதனைக் கண்டறிந்து, அதற்கான முறையான சிகிச்சை அளித்தும் கூட பயனின்றி நோயாளிகள் இறக்க நேர்கிறது. இதிலிருந்து நோய் எதிர்க்கும் திறன் போய்விட்டால், மருந்துகளால் பலன் ஏதும் இல்லை என்றும், நோய் எதிர்ப்புத் திறனே வியாதியிலிருந்து விடுபட பிரதான காரணமாக உள்ளதென்றும் தெளிவாக தெரிந்து கொள்ளலாம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நோயாளியின் துணையின்றி மருத்துவர்களால் எதையும் கற்றுக் கொள்ள இயலாது. வெறும் புத்தக அறிவுமூலம் மருத்துவர் எதையும் சாதிக்க இயலாது. ஆக நோயாளியின் துணை காரணமாக மட்டுமே பெற்ற மருத்துவ அறிவினை, அவர்களிடம் பகிர்ந்து கொள்வதை கடமையாக உணர்ந்து (மேலிருந்து போடும் பிச்சை இல்லை அது) அவர்களுக்கு புரிந்த மொழியில், புரியும் வகையில் பிரச்சனைகளை எடுத்துக் கூறி அவர்களை அதிகாரத்தின் (மருத்துவ அறிவின்) காரணமாக ஏமாற்றாமல், இருப்பது தான் மருத்துவர் நோயாளிக்கு பரஸ்பரம் செய்யும் உதவியாகும்.

மேற்கூறப்பட்ட நான்கே வகையான மருந்துகளின் / வியாதிகளின் சுருக்கமான பின்புலங்களை புரிந்து கொண்டால் மட்டுமே, நிரந்தரத் தீர்வுக்கான பாதையை நோக்கி தெளிவாக சிந்திக்க இயலும்.

கிருமிக்கொல்லிகள், ஒரு கிருமி ஏன் இந்த குறிப்பிட்ட உடம்பை தாக்கியது என்பதை அறிந்து அதற்கான சிகிச்சையாக அமையவில்லை.

மருத்துவத்தை 4D எனப்படும் மருத்துவமனை, மருத்துவர், மருந்து, மருத்துவ சோதனைகள் (Dispensaries , Doctors, Drugs, Diagnostics) எனும் சொல்லாடலுக்குள் அடக்குவது சரியானதன்று. அது அழிவுக்கு (Doom) வழிவகுக்கும் என்பதை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

நிரந்தரத் தீர்வு - நோய் எதிர்ப்புத் திறனை எப்படி மக்களிடையே உருவாக்கலாம்?

நோய் எதிர்ப்புத்திறனைப் பெருக்கி, நோய் வராமல் தடுப்பதே நிரந்தரத் தீர்வாக அமையும். நோய் எதிர்க்கும் திறன் என்பது

1. சத்தான சரிவிகித உணவு,
2. சுத்தமான பாதுகாக்கப்பட்ட குடிநீர்,
3. சுற்றுப்புறத்தூய்மை (ஈ, கொசு அதிகம் இல்லாமல் இருத்தல்),
4. அடிப்படை வசதிகளான நல்ல இருப்பிடம், தட்ப வெப்ப நிலை மாற்றத்தை தாங்க அதற்கேற்ற உடை, செருப்பு முதலியன கிடைத்தல்,
5. இராசயன கழிவுகளை (தூசி, புகை தொழிற்சாலை கழிவுகள்) கட்டுக்குள் வைத்தல்,
6. வேலைக்கு உத்தரவாதம், உழைப்பிற்கேற்ற ஊதியம், அதில் ஆண்/பெண் பாகுபாடற்ற தன்மை, போதிய ஓய்வு, அதன் மூலம் ஏற்படும் மன நிம்மதி ஆகியவை அனைவருக்கும் கிடைக்கும் வழி மூலமாக மட்டுமே நிரந்தத் தீர்வைக் காண இயலும்.

வியாதி வராமல் இருக்க, அனைத்திற்கும் அடிநாதமாக அமைந்துள்ள வறுமை ஒழிய, சுரண்டலற்ற சமுதாயம் படைக்க, நடத்தப்படும் மக்கள் போராட்டங்களே மருத்துவப் பிரச்சனைகளுக்கான நிரந்தரத் தீர்வாக அமையும்.

மருத்துவர் Dr என்பது Daylight Robbery என்பது ஆக இருக்கக்கூடாது. அதன் உண்மை பொருளான "Teacher" ஆக இருக்கவேண்டும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பரிந்துரைகள்/ கோரிக்கைகள்/ விருப்பங்கள்

1. WHO கூற்றுப்படி கிராமத்திலுள்ள பொதுவான பெரும்பாலான (80%) வியாதிகளை (Primary Health Care) சரி செய்ய ஓரளவு படித்த, ஆர்வமுள்ள, கிராம மக்களுக்கு பயிற்சி (Village Health Worker) அளித்து, சட்டரீதியாக அங்கீகரிக்கும் தன்மை முன்பு இருந்தது போல் மீண்டும் அமல்படுத்த வேண்டும்.

2. மருந்து மொத்தவிலை / சில்லரை விலை பெருமளவு வித்தியாசம் இருப்பதால் குறிப்பிட்ட வருமானத்திற்கு கீழே உள்ளவர்களுக்கு அரசே அவற்றை வாங்கி இலாபம் ஏதுமின்றி நியாய விலைக்கடை மூலம் வழங்க வேண்டும். அல்லது அம்மக்களுக்கு அடையாள அட்டை வழங்கி மருந்துக் கடைகளில் அவர்கள் மொத்த விலை அளவிலே பெற்றுக் கொள்ளுமாறு செய்யவேண்டும்.

   அரசு தவறும் பட்சத்தில், கிராம இளைஞர்களே கிராம மருந்து கூட்டுறவு கடைகளை நிறுவி, இலாபநோக்கமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருந்துகள் கிடைக்குமாறு செய்ய முன்வரவேண்டும். அந்த முயற்சியில் அதற்கான மருந்துகள் வாங்கித் தரும் பொறுப்பினை எனது குழு ஏற்றுக் கொள்ளும். இம்முயற்சிகள் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும். (உதாரணம்: Dalit Medical Co-operative).

3. கிராம மருத்துவமனைகளில் காலி பணியிடங்களை உடனடியாக நிரப்புதல்.

4. கிராம மருத்துவ நிதி உதவிகளை அதிகப்படுத்தி, ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தி, ஒதுக்கப்பட்ட பணம் (பதுக்காமல்) பாதிக்கப்பட்ட நபர்களை சென்றடையுமாறு செய்தல், அதைக் கண்காணிக்க குழு அமைத்து, அது முறையாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. அரசு மருத்துவர்கள் தனியார் மருத்துவமனை நடத்துவதை தடை செய்தல்.

6. அத்தியாவசியமான மருந்துகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட மருந்துகளை மீண்டும் பட்டியலில் சேர்த்தல்; அம்மருந்துகள் அனைத்தையும் விலைக்கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருதல்.

7. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், சித்த மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம், யுனானி மருத்துவம், அக்குபங்சர் போன்ற பிரிவுகளை கொண்டு வருதல்.

8. அனைவருக்கும் குறிப்பாக ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் - உண்ண உணவு, வசிக்க ஓரளவு வசதியான இடம், உடுக்க உடை கிடைப்பதற்கு முன்னுரிமை கொடுத்தல்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

9. அனைவருக்கும் வேலை, வேலைக்கேற்ற ஊதியம், ஊதியத்தில் ஆண்/பெண் பாகுபாடற்ற தன்மை இவற்றிற்கு உத்தரவாதம் வழங்குதல்.

10. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், அடிப்படை மருத்துவக் கல்வி/ பொதுகல்வி வழங்க ஏற்பாடு செய்தல்.

11. சுற்றுச்சூழல் சீர் கேட்டை ஏற்படுத்தாத / கட்டுக்குள் வைக்கப்பட்ட வளர்ச்சியை உருவாக்குதல்.

12. மாதம் ஒருமுறை அனைத்து கிராமங்களிலும் மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்து மக்களுக்கு புரிந்த மொழியில், புரியும் வகையில், மருத்துவ கருத்துக்களை அந்தந்த இடத்தின் தேவைக்கேற்ப பகிர்ந்து கொள்ளுதல். மக்களின் ஈடுபாட்டோடு மருத்துவ பிரச்சனைகளுக்கான தீர்வு காணுதல்.

13. இரத்த சோகை/ சத்துக்குறைவு பிரச்சனைகளுக்கு தீர்வுகாண பாதிக்கப்பட்ட மக்களுக்கு சத்துணவு, கீரை வழங்க ஏற்பாடு செய்தல்.

14. சுகாதாரத்தை பாதிக்கும் பீடி, சிகரெட், கள், சாராயம், புகையிலை, குட்கா மற்றும் பிற போதை பொருட்கள் ஆகியவற்றை தடைசெய்தல்.

15. உணவு, நீர், காற்று, ஆகியவற்றில் கலந்துள்ள பூச்சிக் கொல்லி, வேதி நச்சுப் பொருட்களின் அளவை தொடர்ந்து கண்காணித்தல், அதை பொதுமக்கள் பார்வைக்கு வைத்தல், அதன் மூலம் சுகாதாரம் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுதல்.

16. நோய் எதிர்ப்புத் திறனின் ஆணிவேராக அமைந்த சரிவிகித உணவு அனைவருக்கும் குறிப்பாக ஏழை மக்களுக்கு கிடைக்க, வறுமை ஒழிய, சுரண்டலற்ற சமுதாயம் படைக்கும் பணியை போர்கால நடவடிக்கை போல் முன்னெடுத்தல்; அதற்காக பெண்விடுதலை, சமத்துவம், சிறுபான்மையினர் உரிமை, சாதி ஒழிப்பு உள்ளடக்கிய வர்க்கப்போராட்டங்களை முன்னெடுத்தலே, மருத்துவத்தில் நிரந்தரத் தீர்வாக அமையும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உலகமயமாக்கலும் மருத்துவநலமும்

14.06.2005 அன்று SIDDHA FEST '05 விழாவில் பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்கள் (இயற்பியல் துறை - மாநிலக் கல்லூரி, சென்னை) நிகழ்த்திய உரை.

நமது பாரம்பரிய மருத்துவமுறைகள், மாற்று மருத்துவமுறைகள் எல்லாம் கிட்டத்தட்ட இந்த தமிழ்ச் சூழலில் முற்றாக அழிக்கப்பட்டு அலோபதி மருத்துவமுறை கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகவே இங்கு திணிக்கப்பட்டிருந்ததன் விளைவாக, நமது மருத்துவச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்பது அளப்பரியது. இது குறித்த விழிப்புணர்வு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் குறைவு. அங்குள்ள அலோபதி மருத்துவர்களிலேயே சமூகப் பொறுப்புடைய சில மருத்துவர்கள், எப்படி தடை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான மருந்துகள் இந்தியாவில் விற்பனை ஆகிக் கொண்டிருக்கின்றன; இங்குள்ள "ரோச்" போன்ற மிகப்பெரிய பன்னாட்டு மருந்து கம்பெனிகள், எப்படி தங்கள் நாடுகளில் தடைசெய்யப்பட்ட மருந்துகளை இங்கு கொண்டு வந்து விற்கிறார்கள்; இவை எப்படியெல்லாம் உடலை பாதிக்கின்றன என்பது போன்ற விஷயங்களை எல்லாம் பட்டியலிட்டு விளக்கி பல நூல்களை எழுதியிருக்கிறார்கள். ஆனால் தமிழ்ச் சூழலில் அது இல்லை.

உலக அளவில், அலோபதி மருந்துகளை உற்பத்தி செய்யக்கூடிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று. உலக வரிசையில் இதில் 4வது இடத்தில் இந்தியா இருக்கிறது. இந்த மருந்துகள் உலக அளவில் மிகவும் மலிவாக கிடைக்கக்கூடியதும் நம்நாட்டில்தான். உதாரணமாக ஒரு "டோஸ்" 'சிப்ரோ பிளாக்சின்' மாத்திரையை 6ரூபாயிலிருந்து 8ரூபாய்க்குள் வாங்கிவிடலாம். அருகிலுள்ள பாகிஸ்தான், பாங்களாதேஷ் போன்ற நாடுகளை ஒப்பிடும்போது கூட இது மலிவாகத்தான் இருக்கிறது இன்று வரை. நாளை இந்த மருந்துகளினுடைய விலையெல்லாம் கிட்டத்தட்ட 250 சதவீதம் வரை ஏறப்போகின்றன.

TRIPS என்று சொல்வார்கள், (வணிகத்துடன் தொடர்புடைய அறிவுசார் சொத்துரிமை சட்டம்) அந்த TRIPS சட்டத்தின் ஆளுகைக்கு கீழ் நம்முடைய இந்தியா வந்து 10 வருடம் ஆகிறது. 1995 ஜனவரி 1ம் தேதியன்று இந்தியா அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதற்கு பிறகு ஒரு பத்தாண்டு காலம் இந்த மருந்துகளையெல்லாம் பழைய விலையிலே விற்பதற்கு நமக்கு அனுமதி இருந்தது. இந்த வருடம் மார்ச் 23ம் தேதியன்று புதிய சட்டம் இயற்றப்பட்டுவிட்டது. இந்தச் சட்டத்தின்படி மருந்து விலைகளெல்லாம் மிகப்பெரிய அளவில் ஏறப்போகின்றன.

மருத்துவம் என்பது ஏழை, எளிய மக்களுக்கு எட்டாத தொலைவில் சென்றுவிட்ட சூழலில், மீண்டும் பாரம்பரிய மருத்துவத்தை நோக்கி திரும்ப வேண்டிய காலம் வந்திருக்கிறது. இந்த சவாலை பாரம்பரிய மருத்துவம் எந்த அளவிற்கு எதிர்கொள்ளப்போகிறது என்பதை, மாணவர்களாகிய நீங்கள் திறந்த மனதுடன் சிந்திக்கவேண்டும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இன்று நாம் Globalisation என்ற உலகமயமாக்கச்சூழலில் நின்று கொண்டிருக்கிறோம். இந்த உலகமயச் சூழலுக்கு பொருத்தமாக உருவானதுதான் இந்த அலோபதி மருத்துவம் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே அது, அந்தந்த காலகட்டத்திற்கு ஏற்றாற்போல தன்னை மாற்றிக் கொண்டு வந்திருக்கிறது அதேபோல முதலாளித்துவமும் அது வளர, வளர இந்த மருத்துவத்தையும் அதற்கு ஏற்றாற் போல உருமாற்றிக் கொண்டு வந்திருக்கிறது.

இந்த அலோபதி மருத்துவத்தின் தோற்றகால வரலாற்றை நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், அதன் பின்புலம் நமக்குத் தெரியும். இன்று அலோபதி மருத்துவத்தில் இருக்கக்கூடிய மிகப்பெரிய மருந்து நிறுவனங்களான ரோச் மாதிரியான நிறுவனங்கள் அனைத்துமே, ஆரம்பக் காலத்தில் சாயத் தொழில் செய்து கொண்டிருந்தவை. சாயத்தொழிலுக்கும் மருத்துவத்திற்கும் என்ன தொடர்பு? வேதியியல் பொருட்களை மருந்துப் பொருட்களாக பயன்படுத்துவது என்பதெல்லாம் ஒரு 15,16 ம் நுற்றாண்டிலே, முதலாளித்துவம் வளர்ந்து கொண்டிருந்த காலகட்டத்திலேதான் ஐரோப்பாவிலே அறிமுகமானது. அதற்கு முன்னாலே" மெர்குரி" போன்ற ஒன்றிரண்டு பொருட்களை அவர்கள் பயன்படுத்தி வந்தாலும் கூட பெரிய அளவில், வேதியியல் பொருட்களைக் கொண்டு மருந்துகள் செய்வது குறித்த அறிவு இல்லாதிருந்த காலகட்டம். இந்தச் சூழலில் தான், பால் என்பவர் ஒரு கண்டுபிடிப்பை அறிவித்தார். அதாவது சாயப்பொருட்களை உட்கொள்ளும்போது, உடம்பின் ஒரு குறிப்பிட்ட பகுதியை சென்று தாக்குகின்றன என்று அவர் கூறினார். உதாரணமாக "மெத்திலின் ப்ளூ" இதை உட்கொண்டால் அது நேரடியாக நரம்பு மண்டலத்தைச் சென்றுத் தாக்கும். எனவே அதனுடைய அடிப்படையில் இது போன்று பல்வேறு வகையான சாயப்பொருட்களுக்கும் பல்வேறு வகையான பண்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. உடனே அதற்குரிய வகையில் பல மருந்துகள் உருவாயின.

உடனே சாயத்தொழிலில் கிடைப்பதை விட, மருந்து தொழிலில் அதிக லாபம் கிடைக்கிறது என்று இந்த சாயக் கம்பெனிகளெல்லாம் மருந்து கம்பெனிகளாக மாறின. இதையொட்டி அவர்களுடைய செயல்பாடுகளை தொடர்ச்சியாக பகுப்பாய்வு செய்து பார்த்தோமேயானால், அவர்களுடைய முதலாளித்துவ நடவடிக்கைகளுக்கும், காலனிய நடவடிக்கைகளுக்கும் இணையாக மருத்துவத்துறையிலும் அவர்களுடைய செயல்பாடுகள் இருந்தன என்பதை புரிந்து கொள்ள முடியும்.

அவர்கள் காலனிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, அவர்களுடைய இராணுவத்தினர், அதிகாரிகள் எல்லாம் இந்தியா போன்ற வெப்பமண்டல நாடுகளில் வந்து குடியேறும் போது ஏற்படக்கூடிய வியாதிகள், இங்கிருக்கக்கூடிய கிருமித்தொற்று போன்றவற்றைப் பார்த்து இவைகளை குறித்து ஆய்வு செய்தார்கள். அப்போதுதான் லூயி பாஸ்டர் கிருமித்தொற்றுக் குறித்து ஆய்வு செய்ததெல்லாம். நம்முடைய நாடுகளில் காணப்படும் நோய்கள் குறித்து அவர்கள் ஆய்வு செய்ததன் பின்புலம் இதுதான், அதாவது நம்முடைய மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக அவர்களுடைய இராணுவத்தினரும், அதிகாரிகளும் இந்த நோய்களால்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான். அம்மைக்கான தடுப்பு மருந்து, காலரா நோய்க்கான தடுப்பு மருந்து இவையெல்லாம் இந்தப்பின்புலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

இது போன்ற சூழலில் இந்த மருந்துகள் இங்கே பரவலாக கிடைப்பதற்கான சூழலையும், இத்தகைய மருத்துவம் இங்கே வளர்வதற்கான தன்மையையும், அதையொட்டி இங்கிருந்த பாரம்பாரிய மருத்துவத்தை அழிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டனர்.

முதன்முதலில் இங்கு உருவான இந்திய மருத்துவக் கழகம் ஆங்கில மருத்துவப் பயிற்சியாளர்களை மட்டுமே பதிவு செய்து கொள்வது என்ற நடவடிக்கையை மேற்கொண்டது. அதற்கு பிறகு கொஞ்சம் கொஞ்மாக இந்த ஆங்கில மருத்துவதிற்கான முக்கியத்துவமும், அந்த மருந்துகள் கிடைப்பதற்கான வாய்ப்பும், அந்த மருத்துவத்தை படிப்பதற்கான சூழலும், அதை படிப்பவர்களுக்குதான் இங்கிருக்கக்கூடிய அரசு மருத்துவமனையில் வேலை என்பது போன்ற சூழலும் படிப்படியாக உருவாயின. எனவே "மெக்காலே"யுடைய இந்த புதிய கல்வி கொள்கைகள் எல்லாம் வந்தபிறகு, இங்கிருந்த ஆயுர்வேதம் கற்பித்துக் கொண்டிருந்த பள்ளிகளெல்லாம் நிறுத்தப்பட்டது. சித்தா என்பதெல்லாம் அப்போது சொல்லிக் கொடுக்கப்படவே இல்லை.

1900-ங்களின் தொடக்கத்தில் இவை நிகழ்ந்தது. எனவே இந்தப் பின்புலத்தில்தான் படிப்படியாக பாரம்பரிய மருத்துவம் முடக்கப்பட்டு, அந்த இடத்தில் அலோபதி மருத்துவம் வருவதற்கான படிப்படியான நிலை ஏற்பட்டது.

1900-ங்களின் தொடக்கத்தில் சென்னை நகரில் மட்டும் 500 ஆங்கில மருத்துவர்கள் இருந்தார்கள். ஆனால் உள்ளூர் மருத்துவர்கள்17,000 பேர் இருந்தார்கள். ஆனால் அடுத்த 10, 20 ஆண்டுகளில் பார்த்தீர்களேயானால், இந்த எண்ணிக்கை குறைந்து கொண்டே போகின்ற நிலை இருந்தது. அதே சமயத்தில் இங்கு உருவான மருத்துவக் கொள்கைகள் என்பது முற்றிலும் மையப்படுத்தப்பட்ட மருத்துவமனைகள், அதில் அலோபதி மருத்துவர்கள் மட்டும் தான் பணியாற்றுவது என்ற நிலை உருவானது. மேலும் முதலாளித்துவத்திற்கே உரிய வேலைப்பிரிவினையும் இதில் உருவானது. அதாவது மருத்துவம் பார்க்க ஒருவர்; மருந்துகள் தயாரிக்க ஒருவர்; அதை விற்பனை செய்ய ஒருவர், இவ்வாறு அது இன்று சந்தைப்படுத்தப்பட்ட தொழிலாக வளர்ந்து நிற்கிறது.

நம்முடைய பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கும், அலோபதிக்குமான ஓர் அடிப்படையான வித்தியாசம், நம்முடைய மருத்துவ முறைகள் உடலை ஒரு முழுமையாக பார்க்கின்றன. அலோபதி மருத்துவம் நம் உடலையும் அதன் பாகங்களையும், ஒரு மெஷினையும், அதன் உதிரிபாகங்களையும் போன்று பார்க்கிறது. இதனடிப்படையில் தான் Specialisation உருவாகிறது. அதாவது கண்ணுக்கென்று ஒரு Specialist, தொண்டைக்கென்று ஒரு Specialist உருவாக்குவது. அதனடிப்படையில் Scan போன்ற கருவிகளை உருவாக்குவது. பலகோடி ரூபாய் வைத்திருப்பவர்கள் மட்டும் தான் இது போன்ற கருவிகளை வைத்துச் செயல்படுத்த முடியும் என்ற நிலையை உருவாக்குவது. இதை எல்லா இடத்திலும் வைக்கமுடியாது. எனவே ஒரு மையப்படுத்தப்பட்ட மருத்துவமனையில் மட்டும்தான்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

(Centralised Hospital) வைத்து செயல்படுத்த முடியும். எனவே எல்லாரும் இந்த மையப்படுத்தப்பட்ட மருத்துவமனையை நோக்கி செல்வது என்கிற எந்திர ரீதியீல் இந்த மருத்துவ முறையானது முற்றிலும் மாற்றப்பட்டது. எனவே கிராமத்து மக்களுக்கு உண்டாகும் சாதாரண நோய்க்கு அங்கிருக்கும் சூழலில் மருத்துவம் பார்ப்பது போய், அவர்கள் நகரத்திலிருக்கும் மையப்படுத்தப்பட்ட மருத்துவமனைகளை நாடுவது என்கிற நிலை உருவானது.

இன்றைக்கும் மக்களுக்கு தேவையான மருத்துவர்களின் எண்ணிக்கை என்பது மிக மிக குறைவான நிலையில் தான் இந்தியாவில் இருக்கிறது. மற்ற நாடுகளில் 400 அல்லது 500 பேருக்கு ஒரு மருத்துவர் என்றால், இங்கு 5,000 அல்லது 10,000 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற நிலையில் தான் இருக்கிறது. Public Health Centre என்கிற கருத்து இந்தியாவில் உருவான கருத்தல்ல. மருத்துவம் மக்களை பெரிய அளவில் சென்றடைய உலகளவில் உருவான கருத்தாக்கம்.

ஒரு லட்சம் பேருக்கு ஒரு PHC என்ற நிலைதான் இன்று உள்ளது. ஆனால் 5,000 அல்லது 10,000 பேருக்கு ஒரு PHC என்கிற நிலை ஏற்பட்டால்தான் அடித்தள மக்களுக்கு பயனுடையதாக இருக்கும்.

இன்றைய உலகமயச் சூழலில், நாம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சனைகளுடன், நம்முடைய மருத்துவத்தையும் புதுப்பிக்க வேண்டிய நிலை உள்ளது. நம்முடைய மருத்துவத்தை பொருத்தமட்டில், அது சிவன் பார்வதியிடம் சொல்லி, பார்வதி நந்தி தேவரிடம் சொல்லி வந்ததாக சொல்லப்படுகிறது. எனவே இந்த மருத்துவம் என்பது ஒரு முடிந்துபோன ஒரு விஷயமாகவும், இதற்கு மேல் இதில் ஆய்வு செய்வதற்கோ, புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கோ வாய்ப்பில்லை என்ற நிலையானது, இன்றை சூழ்நிலையை நாம் எதிர்கொள்வதற்கு எவ்வாறு சரியானதாக இருக்கும் என்பது குறித்து நாம் வெளிப்படையாக சிந்திக்க வேண்டும். நம்முடைய மருத்துவத்திற்கு நீண்ட காலப் பாரம்பாரியமுண்டு என்பதில் நமக்கொன்றும் சந்தேகம் இல்லை. கிட்டத்தட்ட 5300 ஆண்டு கால பாரம்பரியம் நமக்கிருப்பதாகச் சொல்கிறார்கள். எல்லாப் பொருட்களும் ஆய்வுக்குரியதே; எதுவும் புனிதமானதல்ல; எதுவும் மர்மப்படுத்தக்கூடியதல்ல, என்ற அடிப்படையில் நம் உடலையும், இந்த பிரபஞ்சத்தையும் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து உருவானதே நமது தொன்மையான மருத்துவம்.

மனைத்தேர்வு என்ற தலைப்பின் கீழ், தாழ்த்தப்பட்டவர்களின் குடியிருப்புகளுக்கு அருகில் வீடு கட்டக்கூடாது என்று சிற்பசாஸ்திரத்தில் கூறியது, சித்தமருத்துவக் கல்லூரியில் பாடமாக வைக்கப்பட்டிருக்கும் அவலநிலை அதிர்ச்சியைத் தருகிறது. இந்த பழமையிலுள்ள சிக்கல் இதுதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பழமையை நாம் விட்டுவிடக்கூடாது என்பதில் நமக்கு எந்தவித கருத்து மாறுபாடும் இருக்க முடியாது. ஆனால் பழமையைத் தூக்கிச் சுமக்கும் போது இது போன்ற கொடூரங்களையும் நாம் தூக்கிச் சுமக்க வேண்டியிருக்கிறது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

எனவே மதத்திலிருந்து மருத்துவத்தைப் பிரிக்க வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. தேவையில்லாதவற்றையெல்லாம் கழித்துக்கொண்டே வந்து, தேவையானவற்றை மட்டும் சேர்ப்பித்து, நம் மருத்துவத்தை புதுப்பிக்க வேண்டிய நிலை நமக்கிருக்கிறது.

இன்று புதிது புதிதாக நோய்கள் தோன்றிக் கொண்டிருக்கும் நிலையில் நாம் எவ்வாறு இதனை சர்வதேச நிலையில் அதற்குரிய இடத்திற்கு கொண்டு செல்லப்போகிறோம்?அதற்கான வடிவங்களை நாம் நவீன சூழலுக்கேற்றவாறு மாற்றியமைக்க வேண்டிய நிலை இருக்கிறது.

நமது வாழ்க்கைப் பாணி முற்றிலும் மாறி விட்ட நிலையில், சித்த மருத்துவத்தை புத்துயிர்ப்பு செய்ய வேண்டுமானால், நாம் நம்முடைய பழைய வாழ்க்கை முறைக்கே செல்லவேண்டுமா? நம்முடைய பழைய உணவு வகைகள் முதலியவற்றையெல்லாம் மீண்டும் புழக்கத்திற்கு கொண்டு வரவேண்டுமா? இன்றைய நிலைக்கு ஏற்றவாறு சித்தமருத்துவத்தை நவீன தொழில் நுட்பங்களுடன் இணைத்து செயலாற்ற முடியுமா? இவை குறித்த கேள்விகளை நான் உங்கள் முன் வைக்கிறேன்.

எனவே மரபை அப்படியே சுமக்கும் முட்டாள்தனத்தை செய்யாமல், மரபிலிருக்கும் சரியானவற்றை நமதுச் சூழலுக்கேற்றவாறு எப்படி பயன்படுத்த வேண்டும் என்கிற ரீதியில் இளைஞர்கள் சிந்திக்க வேண்டும்.

நன்றி.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நமது பண்பாட்டில் மருத்துவம்

15.06.2005 அன்று SIDDHA FEST '05 விழாவில் பேராசிரியர் தொ.பரமசிவன் அவர்கள் (தமிழியல் துறைத்தலைவர், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்) நிகழ்த்திய உரை.

நமது பாரம்பரியமான அறிவுச்செல்வத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற உணர்வுடன் கூடியிருக்கிறோம். தாங்கள் பெற்றிருக்கும் பாரம்பரியமான அறிவை எளிய மக்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விருப்பப்படுகிறோம். எனவே இந்த வளாகத்தில் எனக்கு உங்களுடனே இருப்பது வேறுயாரையும் விட மகிழ்ச்சியை தருகிறது. " **நமது பண்பாட்டில் மருத்துவம்** " என்று ஒரு தலைப்பினை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

பண்பாடு என்ற சொல்லை, நாம் மிகச் சுருக்கமாகவே புரிந்துகொண்டிருக்கிறோம். உண்மையில் பண்பாடு என்பது தனிமனித ஒழுக்கம் சார்ந்த ஒன்றல்ல. பண்பாடு என்பது ஒரு சமுகத்தினுடைய வெளிப்பாடு. ஒரு மக்கள் திரள், தன்னை வெளிப்படுத்திக்கொள்கிற முறை. சொல்லாலே, செயலாலே, கருத்தினாலே தன்னை வெளிப்படுத்திக்கொள்கிற முறைக்குத்தான் பண்பாடு என்று பெயர். நம்முடைய தெய்வங்கள், நம்முடைய இசை, நம்முடைய கலை, நம்முடைய உணவு, நம்முடைய உடை, நம்முடைய உடையை நாம் செய்கிற முறை, நம்முடைய உடையை நாம் உடுத்துகிறமுறை எல்லாமே பண்பாடு சார்ந்த அசைவுகள்தான்.

பண்பாடு என்பது ஒரு முழுமையான பொருள். இந்த முழுமை சார்ந்த பார்வை (Wholistic approach) இல்லாது போன காரணத்தினாலேதான், பண்பாடு பற்றிய நமது பார்வை மிகவும் பலவீனமாக இருக்கிறது.

பண்பாடு என்பது, நம்முடைய ரத்த ஓட்டத்தோடு கலந்ததாகும். அது நமது மூச்சுக் காற்றைப் போல; நான் உங்கள் முன்னாலே மூச்சு வாங்கிக் கொண்டு பேசிக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கவில்லை. நாம் மூச்சு வாங்கிக் கொண்டு இருக்கிறோம் என்பது எப்போது தெரியும் என்றால், மூக்கிலே ஏதேனும் அடைப்பு ஏற்பட்டால் நாம் அதை உணர்கிறோம். பண்பாடு என்பதை அது மீறப்படுகிறபோதுதான் உணர்கிறோம். இன்னொரு கட்டமாக, தேவைப்படுகிற போது பண்பாட்டை உணர்கிறோம். நம்முடைய வீட்டிற்கு தண்ணீர் போதாது என்கிறபோது. நம்முடைய வீட்டிலே மண்ணிற்கு கீழாகவே தண்ணீர் இருக்கிறதே என்று நமக்குத் தோன்றும். எனவே சமூகத் தேவை ஏற்படுகிறபோதும், நடைமுறை வாழ்க்கை மீறப்படுகிறபோதும் நாம் பண்பாட்டைப் பற்றி கவலைப்படுகிறோம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

உலகமயமாக்கம் என்ற சொல்லை ஏன் திரும்ப, திரும்ப கேட்டுக்கொண்டிருக்கிறோம்? உலகமயமாக்கம் என்பது, பொருளாதார நடவடிக்கை என்றுதான் பத்திரிக்கை படிப்பவர்களும், மெத்தப்படித்தவர்களும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையிலே, உலகமயமாக்கல் என்பது ஒரு கலாச்சாரத்தாக்குதல். மிகப்பெரிய, தொன்மையான கலாச்சாரமுடைய தமிழ் மொழி பேசுகிற மக்கள் மீதும், இந்தியாவில் மற்றமொழி பேசுகின்ற மக்கள்மீதும், அது மூலதனத்தால் தொடுக்கப்பட்டிருக்கிற கலாச்சார யுத்தம். இந்தக் கலாச்சார யுத்தத்தை நம்மீது தொடுத்திருப்பது யார் என்று கேட்டால் மிக, மிகப்பெரிய நம்பமுடியாத அளவுடைய பன்னாட்டு மூலதனமே அது.

ஒரு 150 ஆண்டுக்கால காலனிய ஆட்சியிலே எதை எதை எப்படிப் பார்க்க வேண்டும் என்கிற பார்வையை நாம் இழந்து போயிருக்கிறோம். அதன் விளைவாக நாம் இன்று எப்படிக் கட்டப்பட்டிருக்கின்றோம்? இன்று, இங்கு இருக்கிற, குறிப்பாக 25 வயதுக்கு கீழாக இருக்கிற இளைஞர்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் உளவியல், எப்படிக் கட்டப்பட்டிருக்கிறது? எது எது தேவையோ, அதையெல்லாம் தேவையில்லை என்கிறது. எது எது மறக்கப்பட வேண்டியதோ அதையெல்லாம் நினைக்கப்பட வேண்டும் என்கிறது. எதையெல்லாம் மீற வேண்டும் என நினைக்கிறோமோ, அதற்கெல்லாம் அடங்கிப் போக வேண்டுமென்கிறது. உண்மையிலே கலாச்சார போலித்தனத்தால் நாம் கட்டப்பட்டிருக்கிறோம்.

பன்னாட்டு மூலதனம் என்பது, இப்பொழுது என்ன செய்கிறது என்றால், தான் எந்தெந்த நாடுகளிலெல்லாம் கொள்ளையடிக்கப் போகிறோமோ, அங்கெல்லாம் முதலில் பண்பாட்டு வன்முறையை ஏவுகிறது. வன்முறை என்றால் நமக்கு தோன்றுவது கத்தி, கம்பு, A.K.47. ஆனால் பண்பாட்டு வன்முறை என்பது மிகவும் நுட்பமானது. இதற்கு உதாரணம் தரலாம் என நினைக்கிறேன். தினந்தந்தியிலே, சுக்குக்கு என்ன பயன், மிளகுக்கு என்னபயன், தூதுவளைக்கு என்ன பயன் என்று ஒரு சின்ன இடத்திலே போடுவார்கள். அதற்கு என்ன பெயர் தருவார்கள் என்றால் 'பாட்டி வைத்தியம்'. இதற்கு மரபுச்சொல் 'கைமருத்துவம்' அல்லது 'வீட்டுமருத்துவம்'. இச்சொல்லுக்குரிய பாரம்பரியமான அறிவுத்தொகுதி நம்முடைய வீட்டிலே பிறந்த எல்லா பெண் பிள்ளைகளுக்கும் பங்கிடப்பட்டிருக்கிறது முந்திய சமுதாயத்தாலே. அதில் என் சகோதரிக்கும், என் மனைவிக்கும், என் மகளுக்கும் சிறுதுளி தெரியும்.

அதை ஏன் 'பாட்டி வைத்தியம்' என்று சொல்கிறார்களென்றால் அது ஒரு வன்முறையான நிகழ்வு. 'உங்கள் மேனியின் சிகப்பழகிற்கு' என்று சொல்கிறார்களல்லவா? அதுவும் ஒரு பண்பாட்டு வன்முறைதான். பாட்டி வைத்தியம் என்றசொல்லே ஒரு பண்பாட்டு வன்முறைதான். எப்படியென்றால், பாட்டி எப்படி சமகாலச் சமூகத்தோடு இயங்கிச்செல்ல முடியாதோ, அதுபோல இந்த மருத்துவமும் சமகாலச் சமூகத்தோடு இயங்கிச்செல்ல முடியாது. பாட்டி எப்படி பரிவோடு பார்க்கப்பட வேண்டியவளோ, அதுபோல இந்த மருத்துவமும் பரிவோடு பார்க்கப்படவேண்டியது, அவ்வளவுதான்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இது என்னுடைய வைத்தியம். அது பாரம்பரியமான வேர்களை என்னிடத்திலே கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. நாம் மிக ஆழமான வேர்களைக் கொண்ட ஆலமரம் போன்றவர்கள். நமது பண்பாட்டு வேர்கள் மிக ஆழமானவை; நீளமானவை; மிகத்தொன்மையானவை. நமக்கு அருகில் இருக்கும் ஆதிச்சநல்லூர்ப் பண்பாட்டிலிருந்து நமக்குச் சில செய்திகள் தெரிகின்றன. அந்த மக்கள் தாய்த் தெய்வத்தை வணங்கி இருக்கிறார்கள். கி.மு.10ம் நூற்றாண்டு அளவில் வெண்கலம் பயன்படுத்தி இருக்கிறார்கள். உலோகவியலிலே அவர்களுக்கிருந்த அறிவு தொல்லியல் ஆய்வாளர்களுக்கெல்லாம் பெரும் வியப்பைத் தருகிற செய்தி.

இந்தியாவினுடைய மற்றப் பகுதிகளிலெல்லாம் இரும்புக்காலம் முடிந்து வெண்கலக்காலம் தொடங்குகிறது. ஆனால் இங்கு இரும்புக்காலம் தோன்றுகிறபோதே வெண்கலக்காலம் தோன்றியிருக்கிறது. தொல்லியல் ஆய்வாளர்கள், இந்தியாவிலேயே இரும்பை உருக்குகிற தொழில்நுட்பம் தாமிரபரணிக் கரையைப் போல் வேறு எங்கும் சிறந்ததாக இல்லை என்கிறார்கள். வெண்கலம் என்ற கலப்பு உலோகத்தைச் செய்கிற முறைக்கு அவர்கள் பயன்படுத்திய உலைகள் நமக்கு கிடைத்திருக்கிறது. அவர்கள் பயன்படுத்திய, உலோகத்தை உருக்கி ஊற்றுகிற சுடுமண் குழாய்களை நானும், நண்பர் லெனா. குமார் போன்றவர்களும், வீரவநல்லூர்க்கருகில் கண்டுபிடித்திருக்கிறோம். அவர்கள் என்ன கலனை (உருக்குவதற்கான பாத்திரம்) பயன்படுத்தினார்கள்? அவர்கள் என்ன எரிபொருளைப் பயன்படுத்தினார்கள்? வெப்பம் பற்றிய அவர்களின் அறிவு என்னவாக இருந்தது? இவையெல்லாம் ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட வேண்டியவையாகும்.

நம்முடைய முன்னோர்கள், நமக்கு நல்ல வீட்டை, நல்ல காற்றை, நல்ல மண்ணை, இவை எல்லவற்றையும்விட இவைபற்றிய அறிவையும் விட்டுச் சென்றிருக்கிறார்கள். இதை உணரும் போதுதான் பண்பாடு பற்றிய அடையாளங்களை புரிந்து கொள்கிறோம்.

இந்தப் பின்னணியிலே நாம் மருத்துவம் பற்றிப் பேசலாம். பண்பாட்டில் மருத்துவம் மட்டும் இல்லை. நம்முடைய இசை, கலை, நாடகங்கள், இலக்கியம், சிற்பம், சமயம், அந்த சமயம் சார்ந்த வாழ்வியல் விழுமியங்கள் இவையெல்லாம் சேர்ந்ததுதான் பண்பாடு. மருத்துவம் என்ற சொல்லுக்குத் தமிழில் வேர்ச்சொல் "மரு" என்பது தான். மரு என்ற சொல்லுக்குத் தமிழில் 'மணம்' என்பதாகப் பொருள் இருக்கிறது. இந்தசொல் எப்படி வந்திருக்கக்கூடும்? தாவரங்களை வகைப்படுத்துகிறபோது மனிதன் அந்த மணங்களிலிருந்துதான் வகைப்படுத்தி இருக்க வேண்டும். மருக்கொழுந்து என்றால் மணமுள்ள கொழுந்து என்றுதான் அர்த்தம். இந்த மணம் தாவரங்கள் மட்டுமல்ல, அசைகின்ற உயிர் உலகத்திற்குகூட உண்டு. உதாரணமாக, புனுகுப் பூனை பார்த்திருப்பீர்கள். எனவே இந்த மரு என்ற சொல், தாவரங்களை மணங்களினாலே அறிவதில் இருந்துதான் வந்திருக்கும், என நினைக்கிறேன். எனவே உணவாகட்டும், மருந்தாகட்டும், தாவரங்கள் எனும் நிலைஉயிரிகளை அவற்றின் மணத்தைக் கொண்டே அறிவதென்பது மிகவும் நுட்பமானது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அறிவு என்பது எழுத்துமூலத்தை சார்ந்ததுதான் என்று கருதக்கூடாது. அப்படிக் கருத வைத்தது **European Epistomology -ஐரோப்பிய மெய்காண் முறைமை**. அதனால்தான் ஐரோப்பியர் "எழுதக் தெரியாதவனெல்லாம் முட்டாள்" என்று சொன்னார்கள். எழுதத் தெரியாத நம் முன்னோர்களுடைய தாவரம் பற்றிய அறிவு பொய்யானதா? அவர்களுடைய மருந்து பற்றிய அறிவு பொய்யானதா? உலகம் பற்றிய அறிவு, அவர்களது வாழ்வியல் விழுமியங்கள் பற்றிய தன்னுணர்ச்சி பொய்யானதா?

எனவே, அறிவு என்பது எழுத்து மரபு சார்ந்தது, எழுத்து வருபவனுக்குத்தான் அறிவு வரும் என்பது ஒரு பொய். எழுத்துப் பிறப்பதற்கு முன்னாலேயே அறிவு பிறந்தது. எழுதப்படிக்கத் தெரியாத ஒருவன், ஒரு அழகான சிற்பத்தை ஆக்கமுடியும்; ஒரு நாற்காலியை செய்ய முடியும்; இது எழுத்து மரபு பிறப்பதற்கு முன்னாலேயே பிறந்த அறிவு. இதைத் தான் **கார்ல் மார்க்ஸ் "தொகுக்கப்படாத அறிவு"** என்று சொல்வார்.

எப்பொழுது நீங்கள் எல்லாவற்றையும் புத்தகமாக / பனுவலாக (Textualize) பண்ண விரும்புகிறீர்களோ, எழுத்து மூலம் கொள்ளை கொண்டு போய் "இதுதான், இதுதான்" என்று சொல்கிறீர்களோ, அப்போது அது முடிந்துபோகிற விஷயம். நேற்றுப் பேசிய தோழர் அ.மார்க்ஸ் கூறியது போல, சித்த மருத்துவ அறிவு ஏடுபடுத்தப்பட்டதினாலே முடிந்து போனது என்று நினைத்தால், நம்மைப்போல முட்டாள் யாரும் கிடையாது. ஏனென்றால் அண்டம் பற்றிய, பூமியைப் பற்றிய நமது அறிவு இன்னும் முழுமையானதல்ல. அறியப்படாத மனிதரைப் போல, அறியப்படாத தாவரங்கள் நிறைய இருக்கின்றன. அறியப்படாத உயிரினங்கள் நிறைய இருக்கின்றன. இவை பற்றிய அறிவு பெருகப்பெருக மனித வாழ்க்கை இன்னும் எளிமையாகும்; இன்னும் இனிமையாகும்.

எனவே இந்த எழுத்து மரபுக்கு முந்திய அறிவு காட்டு வாழ்விலிருந்து, மணத்திலிருந்து பெற்ற மருத்துவ அறிவுதான். மணங்களைக் கொண்டு தாவரங்களை வகைப்படுத்திய அறிவுதான். மனித உடம்பிலிருந்தே மனிதன் நிறைய விஷயங்களை கற்றுக்கொண்டான். வெட்டுகின்ற ஆயுதத்தை, குத்திக் கிழிக்கின்ற ஆயுதத்தை, அரைக்கின்ற ஆயுதத்தை இவற்றையெல்லாம் மனிதன் தன் பல்வரிசையிலிருந்தே கற்றுக்கொண்டான். தன்னை முழுமையான ஒன்றாகக் கருதி, தன்னிலிருந்தே கற்றுக்கொண்ட விஷயம். இப்படித்தான் மருத்துவ அறிவு தொடங்கி இருக்கிறது.

மருத்துவ அறிவு ஏனைய அறிவைவிட கூர்மையானதாக இருக்க வேண்டும். "மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்" என்பது சங்கஇலக்கியம். நோயாளிக்கு அவன் விருப்பப்பட்டதைக் கொடுக்காமல் ஆய்ந்து ஆய்ந்து மருந்து கொடுத்தானே, எனவே ஆராய்ச்சி இந்த மருத்துவ உலகிலிருந்துதான் துவங்குகிறது. "மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்"- இது Professional Ethics-என்று சொல்லக்கூடிய தொழில் சார்ந்த அறம். இது வேறு யாரையும் விட, மருத்துவம் செய்பவர்க்கே அவருடைய தொழில் சார்ந்த அறம் முன்னிலைப்படுத்தப்படுகிறது தமிழ்ச் சமூகத்திலே.

இந்த அறம் முன்னிலைப்படுத்தப்பட்ட காரணத்தினாலேதான் அரசுகள் எல்லாம் உருவாகிறபோது, சொத்துகள் எல்லாம் பிறக்கிற போது, ஆசைகள் உருவாகிறதுபோது மருத்துவத்தை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஒரு தொழிலாக, ஒரு முழுநேரப் பணியாக யாரும் கையிலெடுத்திருக்க மாட்டார்கள். எனவேதான், துறவிகள் இதனைக் கையில் எடுத்துக்கொண்டார்கள்.

சித்த மரபுக்கு முன்னாலே இங்கே சமண மரபு என்று ஒன்று இருந்தது. நாமெல்லாம் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களெல்லாம், சமணர்களாகத்தான் இருந்தோம். இன்றைக்கும் சமண மதத்தினுடைய தாக்கம் நம் வாழ்வில் உள்ளது. சமணமதம் நான்கே, நான்கு விஷயங்களைத்தான் வலியுறுத்தும். அந்த நான்கு என்னவென்றால்,

1. சோற்றைக் கொடையாகக் கொடுப்பது (அன்னதானம்)
2. கல்வியைக் கொடையாகக் கொடுப்பது (ஞானதானம்)
3. மருந்தைக் கொடையாகக் கொடுப்பது (ஔஷத தானம்)
4. அடைக்கலம் கொடுப்பது (அடைக்கல தானம்)

இந்த நான்கையும் கழித்துவிட்டு பார்த்தால் அந்த "யுனெஸ்கோ" என்ற அமைப்பே இல்லை. "கல்வியைக் கொடையாகக் கொடு, மருந்தைக் கொடையாகக் கொடு" இப்படி சொன்னது, உலகத்திலேயே சமண மதம் ஒன்று தான். அது வேதத்தை எதிர்த்த மதம். வைதீகத்தை நிராகரித்த மதம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அது திகம்பர துறவிகள் இருந்த மதம். அவர்கள் மருத்துவ ஏடுகளைத் தவிர வேறுஎதையும் கையிலே வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்கள் வாழ்ந்த குகைகளிலே குடிக்கத் தண்ணீர்க்குழி மட்டுமே உண்டு. குடிக்க டம்ளர்கூடக் கிடையாது. ஆனால் மருத்துவ ஏடு மட்டும் இருக்கும். முழுநேர மருத்துவப் பணியாளராக, ஒரு நாளைக்கு ஒரு பொழுது மட்டும் சாப்பிட்டு, பட்டினி கிடந்த துறவிகள் இருந்தனர். இந்த மருத்துவம் இப்படித்தான் பாதுகாக்கப்பட்டு வந்தது. இப்படிதான் இருந்தனர் அந்த மருத்துவ அறிஞர்கள். ஆனால் ஒன்று, நீங்கள் இன்று சொல்வது போல அசையும் உயிர்களெல்லாம் அந்த மருத்துவத்திலே கிடையாது. ஏனென்றால் அவர்கள் புலால் உண்ணாத நோன்பிகள் ஆவர். அதே போல உலோகங்கள் சார்ந்த மருத்துவமும் அவர்களிடம் கிடையாது. அவர்கள் முழுக்க முழுக்க மூலிகைகளை பயன்படுத்துகிற மருத்துவர்களாகவே இருந்தார்கள். இன்றைக்கும் அழிந்துவிட்ட சமணக் குகைகள் நெல்லை மாவட்டத்திலே இருக்கின்றன. இந்த மதத்தை வீழ்த்திவிட்டு வைதீகம் வந்தது. பாண்டிய அரசு, சோழ அரசு என்று இனக்குழுக்கள் எல்லாம் கரைக்கப்பட்டு, கரைக்கப்பட்டு அரசுகள் உருவாகும் போது மருத்துவம் தொழிலாக ஆகிறது. அதுவரை மருத்துவனும், ஆசிரியனும் காசு பெறக்கூடாது. அதுவரை மருந்து விற்பனைக்குரிய பொருளல்ல. மருந்து விற்பனைக்குரிய பொருளல்ல என்ற எண்ணம் கி.பி. 7ம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டிலே இருந்தது. 12, 13ம் நூற்றாண்டு வரை இன்னொரு நினைப்பும் இருந்தது. அது, "சோறு விற்கக்கூடாது." நெல் விற்கலாம். அரிசி விற்கலாம். வைதீகம் தமிழ்நாட்டை முழுவதும் வென்றெடுத்த பிறகுதான் சோற்றுக்கட்டியினை சத்திரங்களில்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

விற்க ஆரம்பித்தனர். 20-ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை தண்ணீர் விற்கக்கூடாத பொருளாக இருந்தது. இதுதான் பண்பாடு.

எனவே, தமிழ்நாட்டில் அரசு எந்திரம் உருவானபோது,வைதீகம் அதற்கு குறுக்கு வெட்டாகப் பாய்ந்தது. ஏனென்றால், அது தான் அரசுக்கு உவப்பான சித்தாந்தமாக இருந்தது. அப்பொழுதுதான் மிகப்பெரிய சமூக நிறுவனமான கோயில் உருவானது. மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ அவ்வளவு அதிகாரம் கோயிலிலே இருந்தது. இந்தக் கோயில் அதிகாரத்திலிருப்பவர்கள், நாம் என்ன சாதி? நாம் எங்கே இருக்கலாம்? எப்படி உடுத்தலாம்? என்பதையெல்லாம் தீர்மானித்தனர். மருத்துவத்தை செய்துவந்த சாதியினர் கோயிலுக்கு வெளியே நிறுத்தப்பட்டார்கள். (அன்றைய கணக்குப்படி பார்த்தால், குலம் அல்லது குடி, இன்றைய கணக்குப்படி சாதி.) அதற்கு முன், அரசு உருவாகிறபோது அக்குடிகளின் நிலைமை என்ன என்று கேட்டால், உங்களுக்கு மிகவும் வியப்பாக இருக்கும். கி.பி. 8-ம் நூற்றாண்டிலே **மாறஞ்சடையன்** என்கின்ற பாண்டியனுக்கு முதலமைச்சராக இருந்தவர் மருத்துவ சாதியை சார்ந்தவர். இவர் இறந்த பிறகு இவரது தம்பி முதலமைச்சராகிறார். இவர்கள் மானூருக்குப் பக்கத்திலே இருக்கிற களக்குடி எனும் ஊரைச் சார்ந்தவர்கள். இவரைப் பற்றியும், இவரது தம்பியைப் பற்றியும் பேசுகிற கல்வெட்டு ஒன்று மதுரை மாவட்டம் ஆனைமலை நரசிங்கப்பெருமாள் கோயிலிலிருக்கிறது. எனவே ஒரு காலத்தில் அரசனுக்கும், அரசதிகாரத்திற்கும் நெருக்கமாக மருத்துவர்கள் இருந்திருக்கிறார்கள்.

அதற்கு பின், அரசதிகாரம் பெருக,பெருக, அரசுகள் பேரரசுகளாக மாற,மாற, கோயில்கள் துணை நிறுவனங்களாக ஆக,ஆக மருத்துவம் செய்கிற சாதி வெளியில் வைக்கப்பட்டது. அப்புறம், வைதீகம் அரசை கையிலெடுத்துக்கொண்டது. இன்றைக்குப் போல, அன்றைக்கும் எழுதப்படாத அதிகாரம் அதன் கையிலே இருந்தது. மருத்துவக்காணம் என்ற பெயரில் மருந்துப் பொருள்களின் மீது வரிவிதித்தனர் அரசர்கள். இது நம் பண்பாட்டிலே ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம்.

தோழர் அ.மார்க்ஸ் சொன்னது போல, ஆகயிரண்டு மேல்சாதியிலே யாரும் மருத்துவராகக் கூடாது. மருத்துவத் தொழில் செய்யக்கூடாது. ஏனென்றால் அவர்களுக்கு மற்ற எல்லாரும் தொடப்படாத சாதி. இந்த தொடப்படாத சாதிக்காரன் எப்படி உடம்பைத் தொட்டு மருத்துவம் செய்வது? எனவே மருத்துவர்கள் பட்டுத்துணியை போட்டு 'நாடி' பார்த்தனர். இன்னொரு செய்தி, சித்தமருத்துவத்திலே **இரசவாதம்** (Alchemy) என்னும், கீழ்உலோகங்களை உயர்ந்த உலோகங்களாக்கும் முறை சொல்லப்பட்டுள்ளது. ஒரு பேரரசு உருவாகிறபோது, அது பல நிகழ்வுகளை கண் கொத்திப் பாம்பாகக் கவனித்துக் கொண்டிருக்கும். அரசுகள் Alchemy வளர்வதை விரும்பாது. ஏனென்றால், ஒருவன் இரும்பைத் தங்கமாக்குகிற விஷயத்தை கண்டுபிடித்துவிட்டால், ஒரே நாளில் அந்த அரசாங்கத்தை கவிழ்த்துவிட முடியும். எனவே அரசு அதை விரும்பாது. எனவே இந்த அரசியல் உருவான போது Alchemy முழுமையாக அரசினாலே தடைசெய்யப்பட்ட ஒன்றாக இருந்தது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சோழ அரசின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, அடித்தள மக்களைச் சார்ந்து நிற்கிற வணிகக் குழுக்களை அது புறந்தள்ளியதாகும். இதனால் மக்களுடைய எதிர்ப்பு அரசுக்கு உருவானது. மக்களுடைய எதிர்ப்பை அணிதிரட்டியவர்கள் சித்தர்கள். இவர்கள் நகர்ப்புறத்துக்கு வரவே இல்லை. எனவே இந்த சித்தர்களெல்லாம் கிராமப்புறத்துக்கு போனார்கள். மருந்து அவர்களுக்கு ஒரு வலிமையான ஆயுதமாக இருந்தது. ஏனென்றால் மருத்துவனுக்கு மட்டும் எந்த நேரத்திலும், எங்கும் நடக்கின்ற உரிமையைச் சமுதாயம் அளித்திருந்தது. எனவே மக்களுடைய நம்பிக்கையை அவர்கள் பெற்றிருந்ததற்கு இந்த மருந்து எனும் ஆயுதம்தான் காரணம். சித்தர்மரபு வளர்ந்த போதுதான் நஞ்சை மருந்தாகப் பயன்படுத்தக்கூடிய முறை பிறந்தது. அதற்கு முன் அது இருந்ததாக தெரியவில்லை. சித்தர்களையும் மக்களையும் இணைத்தது மருந்து.

நாங்கள் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிற காலம் வரைக்கும் சித்தர் இலக்கியத்தை மதிக்கவேமாட்டார்கள். "ஆச்சு போச்சுன்னு பாட்டு எழுதியிருக்கான், இதை கல்லூரி பிள்ளைகளுக்குசொல்லி கொடுக்க முடியுமா?" என்பார்கள். இப்பொழுதுதான் கலக மரபு சித்தர்கள், என்று சொல்லி சித்தர் பாடல்களை கொஞ்சமாவது வைத்திருக்கிறார்கள். மிகச்சில ஏடுகள் தவிர, 19ம் நூற்றாண்டிலே மக்களிடம் மனப்பாடமாக இருந்ததை பெற்றுத்தான் பெரும்பாலான சித்தர் பாடல்களை அச்சிட்டுவந்தார்கள். அதனாலேயே அதில் சில தவறுகள் எல்லாம் இருந்தன. ஆயிலைத் (Oil) தடவுவாய் என்றெல்லாம் பாட்டிருக்கிறது. இந்த ஏடுகளெல்லாம் திருவாடுதுறை மடத்திலேயோ, தருமபுர மடத்திலேயோ, குன்றக்குடி மடத்திலேயோ இருக்காது. இங்கெல்லாம் சங்க இலக்கியமிருக்கும்; தேவாரமிருக்கும்; திருவாசகமிருக்கும், ஆனால் மருத்துவ ஏடுகள் இருக்காது. ஏனென்றால் இவைகளெல்லாம் மக்களிடமிருந்து பெறப்பட்டுதான் பதிப்பிக்கப் பெற்றன. இதற்கு திருத்திய பதிப்பு கொண்டு வருவதற்கு ஒரு உ.வே.சாமிநாதய்யர் கிடைக்கவில்லை. ஏனென்றால் இவைகள் மடங்களில் பாதுகாக்கப்படவில்லை.

நான் முதலிலேயே கூறியபடி, இந்த "பாட்டி வைத்தியம் என்ற சொல் ஒரு வன்முறை". நம்முடைய பாரம்பரியமான வேர்களை எல்லாம் அழித்தால்தான் (பண்பாடு என்பது ஆணிவேராகவும், பக்கவேர்களாகவும், சல்லி வேர்களாகவும் அமைந்தது. இதை அறுத்து எறிந்தால்தான்) பன்னாட்டு முதலாளிகளுக்கு எதையும் சந்தைப் படுத்த முடியும். எனவே ஆங்கில மருத்துவம் வருகிறபோதே அதிகாரத்தோடு வருகிறது. எதுவரைக்கும் அதிகாரத்தோடு வந்தது என்று கேட்டால் 1920- வரைக்கும் கீழ்சாதிக்காரர்கள் யாருமே மருத்துவராக முடியாது. அதுவரை மருத்துவக்கல்லூரியிலே சேரவேண்டுமானால் குறைந்தபட்ச சமஸ்கிருதம் தெரிந்திருக்கவேண்டும் என்ற விதி இருந்தது. ஆங்கில மருத்துவம் படிப்பதற்கு இது ஒரு முன்நிபந்தனை. இன்று பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட என்றெல்லாம் சொல்கிறோமே, இந்த சாதிகளிலே எத்தனை பேருக்கு அன்றைக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்கும்?. 1920ல் பனகல் அரசரின் நீதிக்கட்சி அமைந்த பிறகுதான் அந்த விதியினை நீக்கினார்கள். அதுவரை ஆங்கில மருத்துவம் என்பது மேல் சாதி அதிகாரத்தோடு

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கட்டப்பட்டிருந்தது. அதிகாரம் என்பதே இங்கு சாதி வழியாக கட்டப்பட்டது. நம்மால் இன்றைக்கும் கூட அதை முழுமையாக உடைத்து எறிய முடியவில்லை.

சித்த மருத்துவம் நோயாளியை மதிக்கின்ற மருத்துவமுறையாகும்.

"உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான்
மற்றிந்நாற் கூற்றே மருந்து"

என்பது வள்ளுவர் கண்ட மருத்துவ நெறியாகும். நோயாளி மதிக்கப்படவேண்டியவன். நோயாளிகளிடமிருந்து மருத்துவர் கற்றுக் கொள்ளக் கூடிய விஷயங்களும் இருக்கிறது. ஆங்கிலமருத்துவம் நடைமுறையில் அதை ஏற்றுக்கொள்ளுவதில்லை. மருத்துவரிடம் நோயாளி ஒரு கேள்விகேட்டால், நோயாளியை ஆங்கில மருத்துவர் மதிப்பதில்லை. எனவே நோயாளி மதிக்கப்படவேண்டியவன் என்பதையும், அவனிடம் இருந்து கற்றுக்கொள்ள விஷயம் இருக்கிறது என்பதையும் நிராகரிக்கிறது அந்த மருத்துவம்.

இயல்பான நிகழ்வுகளை, இல்லாத நோய்களை எல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். எப்படி? பிரசவம் என்பது ஒரு இயல்பான நிகழ்வு. கருக்கொண்டிருக்கிற ஒரு பெண்ணை ஒரு ஆங்கில மருத்துவரிடம் அழைத்துப்போனால், அந்த பெண்ணை அந்த மருத்துவர் ஒரு நோயாளியாகவே பார்க்கிறார், அப்படித்தான் அந்த மருத்துவமுறை, European Epistomology - அவருக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது. அவரை அறியாமலே அந்த European Epistomology-க்கு அடிமையாய் இருக்கிறார். கருக்கொண்ட பெண்ணை ஒரு நோயாளியாக பார்ப்பது மாபெரும் தவறு. கருக்கொள்ளுதல் என்பது ஒரு இயல்பான நிகழ்வு. அது எப்படி நோயாகும்? மருத்துவர்கள் இல்லாமலேயே காலம் காலமாக எத்தனையோ மகப்பேறுகள் நடந்திருக்கின்றனவே!

நான்கு மாதம் கருக்கொண்ட ஒரு பெண் ஒரு ஆங்கில மருத்துவரிடம் போகும்போது, "வயித்துல குழந்தை எப்படி இருக்கிறதோ" என்று நினைத்துக் கொள்கிறாள். திரும்பி வரும்போது குழந்தை என்ற சொல்லை மறந்துவிட்டு Baby என்ற சொல்லோடு வருகிறாள். இங்கு கொள்ளை அடிக்கப்பட்டது நம்முடைய காசு மட்டுமல்ல. நம்முடைய கலாச்சாரம், நம்முடைய மொழி.

பார வண்டி செய்கிற ஒரு ஆசாரிக்கு அதனைப்பற்றி முழுமையான அறிவு உண்டு. என்ன மரத்தில் செய்ய வேண்டும்? என்ன பட்டை போட வேண்டும்? எவ்வளவு பாரம் தாங்கும்? பட்டையினுடைய கனம் என்ன? என்று பொருள் பற்றிய முழுமையான அறிவு உண்டு. பொருளுற்பத்தி பற்றின இந்த முழுமையான அறிவு **வேலைப்பிரிவினை** (Division of labour), **சிறப்புப் பயிற்சி** (Specialisation) இவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.

இன்றைக்கு 'மருந்து' பற்றிய முழுமையான அறிவு ஆங்கில மருத்துவர்களுக்கு இருப்பதாகச் சொல்ல முடியாது. மருத்துவப் பிரதிநிதிகள் போய், மருத்துவரிடம் விளக்கிச் சொன்னால்தான் உண்டு.எனவே பொருள் பற்றிய முழுமையான அறிவு இருக்கக்கூடாது என்பதிலே தெளிவாக இருக்கிறது, உலகமயமாக்கலுக்குப் பின்னணியில் இருக்கிற பன்னாட்டு மூலதனம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நமக்கு காய்ச்சல் வருகிறது. நம்முடைய பாட்டி, வீட்டிலே இருக்கிற சுக்கு, மிளகு இன்னும் சில பொருட்களை இன்ன விகிதத்தில் என்று கலந்து குடிநீரிட்டு தருகிறாள். இரண்டு நாட்களில் சரியாகவில்லையா? "நிலவேம்பை சேர்த்துக்கொடு" என்கிறாள். பிணி பற்றிய அறிவு, எடுத்துக்கொள்ளக் கூடிய மருந்துப்பொருட்களைப் பற்றிய அறிவு, மருந்து பற்றிய அறிவு நம்முடைய பாட்டிக்கு இருக்கிறது. அவளே மருத்துவராக இருக்கிறாள். அவளே Pharmacologist ஆக இருக்கிறாள். அவளே செவிலியாகவும் இருக்கிறாள்.

எனவே பொருள் பற்றிய இந்த அறிவைக் கொன்றழித்தது யார்? இதை மீட்டெடுப்பது யார்? மீட்டெடுப்பது எப்படி? என்பது தான் நம்முன் உள்ள கேள்வி. இந்த பாரம்பரியமான அறிவுத்தொகுதி, மருத்துவத்துறையில் மட்டுமல்ல எல்லாத் துறைகளிலும் கொன்றழிக்கப்படுகிறது என்பதை தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால் இந்த வெப்பமண்டலம் பற்றிய அல்லது அண்டத்தின் இந்தப் பகுதியைப் பற்றிய அறிவை உள்வாங்கிக் கொண்ட ஒரு மருத்துவம், அறிவை உள்வாங்கிக் கொண்ட ஒரு இலக்கியம், இந்த அறிவை உள்வாங்கிக் கொண்டு ஒரு இசை இருந்திருக்க வேண்டுமல்லவா? இவை அனைத்தும் இல்லாமல் போனதற்கான காரணம் இந்த மூலதனத்தினுடைய உள்ளார்ந்த தன்மை "சுரண்டல்" என்பது தான். அப்படியென்றால் இதற்கு எதிராக நாம் என்ன செய்ய வேண்டும்?

நம்முடைய முன்னோர்கள் எல்லாம் சமூகப்பொறுப்பு உடையவர்கள். அவர்கள் சமூகப் பொறுப்பு உடையவர்கள் என்பதினாலே தான் நமக்கு சுத்தமான தாமிரபரணி நீரை விட்டுச்சென்றார்கள். அவர்கள் சமூகப்பொறுப்பு உடையவர்கள் என்பதினாலே தான் வயல்களிலே இரசாயன உரங்களை இடாமல், இயற்கைவளத்தை அப்படியே நம்கையில் தந்துவிட்டு போனார்கள். நாம் தான் ஃபாக்டம்பாசையும், யூரியாவையும் போட்டோம். பூச்சி மருந்துகளை தெளித்தோம். இதுதான் நம் பண்பாட்டிலிருந்து கற்றுக் கொண்டதாகும்.

கிடைக்கிற எல்லா புதிய அனுபவங்களையும் கொண்டு தனக்குத்தானே தகவமைத்துக் கொள்வதுதான் நம் பண்பாட்டின் பலம். Cultural Osmosis என்று சொல்லுவார்கள். ஒரு நல்ல உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டில் கோதுமை விளையாது, ரொட்டி கோதுமையில் செய்கிற உணவு, ரொட்டியை ஐரோப்பியர் கொண்டு வந்தனர். ரொட்டி மட்டுமல்ல கேக், மக்ரூன் இன்னும் என்னென்னவோ கொண்டு வந்தனர். இந்த ரொட்டியை மட்டும் பிரசவித்த பெண்ணின் உணவாக (Post natal food) மாற்றிக்கொண்டார்கள் இல்லையா? அதற்கு பெயர்தான் **Cultural Osmosis- கலாச்சாரத் தகவமைவு.** இது இந்தக் கலாச்சாரத்தின் பலமான அம்சம், இதையெல்லாம் நாம் இழந்து கொண்டு இருக்கிறோம் என்கிற கவலையினை, அக்கறையினை, நாம் பெற்றால்தான் நம்முடைய பாரம்பரியமான இந்த மருத்துவத்தை, நாளைய தலைமுறையின் தேவைக்கு ஏற்றதாக நம்மால் சீரமைக்க முடியும் எனக் கருதுகிறேன்.

நன்றி.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பாரம்பரிய மூலிகைகளும் காப்புரிமையும்

இயற்கை விஞ்ஞானி கோ.நம்மாழ்வார்

- தலைவர், தமிழ்நாடு உழவர் இயக்கம்

தமிழ்ச் சமுதாயம் உலகத்தில் மூத்த சமுதாயம். தமிழர்களின் இலக்கண நூல் தொல்காப்பியம் 3000 ஆண்டுகள் மூத்த நூல். 3000 ஆண்டுகளுக்கு முன்பே சங்கம் அமைத்து வாழ்க்கை நெறியை ஆய்வு செய்தவர்கள் நம் மூதாதையர்கள். தொல்காப்பியத்தை வைத்தே இன்றும் மொழி இலக்கணம் முறைப்படுத்தப்படுகிறது. இது நமக்கு உணர்த்துவது என்ன? மிகப் பழமையான பொருள் செறிந்த வாழ்க்கை வாழ்ந்த மக்கள் தமிழினத்தவர். குமரி மலையும், குமரி ஆறும் நிலவிய காலத்தே அறிவுத்தெளிவுடன் வாழ்ந்தார்கள்.

நாம் வாழும் பூமி புவிக்கோளத்தில் சிறப்பான இடத்தில் அமைந்திருக்கிறது. உயிரினப் பன்மயத்தை இங்கே காணமுடிகின்றது. இயற்கை வள ஆதாரங்களே நல்வாழ்வுக்கான அடிப்படை. இயற்கை வள ஆதாரங்களில் செடி, கொடி, மரங்கள், விலங்கினங்கள், மண்வகைகள் வாழ்க்கையின் முக்கியமான அடிப்படைத் தேவைகள். அவை இங்கே மலிந்து கிடந்தன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால் வகை நில அமைப்பும் அதற்கேற்ற கலாச்சார பிரிவுகளும் இருந்தன. மரங்களையும், விலங்குகளையும் தங்களின் சொந்தங்களாகப் பார்த்தார்கள். ஆதலால் அவை பற்றிய விவரங்களைத் துல்லியமாக பெற்றிருந்தார்கள். அவை மக்களின் உணவு, தீவனம், எரு, எரிபொருள், பலகை, சட்டம், வீடு, உடை, தொழில், கருவி, சக்தி, மருந்து ஆகிய அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்வனவாக இருந்தன.

நீண்ட நெடுங்கால வாழ்க்கைப் போக்கில் உணவைப் பலவகையிலும் பக்குவப்படுத்தி உண்ணக் கற்றுக்கொண்டார்கள். அதுபோலவே பலப்பல வகைகளில் மூலிகைகளை மருந்தாக்கி உட்கொள்ளவும் உணவையே மருந்தாக்கவும் கற்றிருந்தார்கள். இந்த அறிவு விரிந்து பரவுவதற்கும் சிறந்து ஓங்குவதற்கும் சித்தர்களும், புலவர்களும் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். மூலிகைகளின் இருப்பிடமறிந்து, குணமறிந்து, பிணிகளையும் வகை அறிந்து எழுதிவைத்தும் போயுள்ளார்கள்.

நான்கைந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு வாணிபம் செய்து பிழைக்க வந்தவர்கள், நமது சித்த மருத்துவத்தைப் பின்னுக்குத் தள்ளி இம்மண்ணில் அவர் தம் மருத்துவத்தை நட்டுப் பால் வார்த்தார்கள். ஆனாலும் வேர் பிடிக்கவில்லை. காரணம் நமது மூலிகைகள் மக்கள் வாழ்வில் நீக்கமற நிறைந்திருந்தன. வேம்பு, துளசி, திருநீற்றுப்பச்சிலை போன்றவை தொழுகைக்குரியனவாகி காப்பாற்றப்பட்டு வந்துள்ளன.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஆனாலும் கடந்த ஒரு நூற்றாண்டில் பல்வகைத் தந்திரங்களைப் பயன்படுத்தி அந்நியர்கள் நமது சித்த மருத்துவத்தைச் சீரழித்தார்கள். உயிர்காக்கும் மருத்துவத்தை வணிகமாக்கி நமது செல்வத்தைக் கொள்ளை கொண்டு போனார்கள். ஆனாலும் காலத்தை வென்ற மூலிகை மருத்துவம் வெற்றியை நிலைநாட்டியது. வணிகர்கள் போக்கில் மாற்றம் நிகழ்ந்தது. பக்கவிளைவுகளை உண்டு பண்ணும் அவர்களது மருத்துவம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. நமது மூலிகைகளை கப்பல் கப்பலாகக் கொண்டு போய் மருந்து தயாரித்து உலகம் முழுவதும் விற்றுப் பணம் குவித்தார்கள். நமது கீழாநெல்லி கடல் கடந்து போய் மருந்தாகி இங்கேயே திரும்பி வந்தது ஆங்கில பெயர் சூடி. இது நாளும் நாளும் அதிகரித்தது. வாணிபம் என்பது திருட்டாகவும், கொள்ளையாகவும், சூதாட்டமாகவும் வடிவம் கொண்டுள்ளது. **உலக மயமாக்கம்** என்ற போர்வையில் **மூலிகைத்திருட்டு** (BIO-PYRACY) உச்ச கட்டத்தை எட்டியுள்ளது.

உலக மயமாக்கத்தின் ஒரு பிரிவாக காப்புரிமைச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்தக் காப்புரிமைச் சட்டம் பொது அமர்வில் விவாதித்து ஏற்கப்பட்ட ஒன்றல்ல. பணக்கார நாடுகள் புகுத்திக் கொண்ட சட்டமிது, இந்த சட்டம் **"தனிமனித அறிவுச் சொத்துரிமைச் சட்டம்" (Intellectual Property Right)** என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. ஒரு அறிவாளி தனது காலத்தையும் பணத்தையும் செலவழித்து புதியதொன்றைக் கண்டறிகிறான். அவன் போட்ட முதலை எடுக்கின்ற வரை அவனுக்கு காப்பளிப்பதற்காகவே தனிமனித அறிவுச் சொத்துரிமைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக "காட்" ஒப்பந்தம் சொல்கிறது. இந்தக் காப்புரிமைச் சட்டம் என்ன செய்கிறது? இந்த தனிமனித அறிவுச் சொத்துரிமைச் சட்டம் கண்டுபிடிப்பாளனுக்கு கண்டுபிடிப்பின் மீது ஏகபோக உரிமையை அளிக்கிறது. எடுத்துக்காட்டாக கீழாநெல்லி ஹெப்பாடைட்டிஸ் B நோயை (மஞ்சள் காமாலையில் ஒரு பிரிவு) குணப்படுத்துவதை, தான் கண்டுபிடித்ததாகக் கூறி யாரேனும் காப்புரிமை பெற்று விட்டால், வேறு யாரும் கீழாநெல்லியைப் பயன்படுத்தி மஞ்சள் காமாலைக்கு மருந்து தயாரிக்கவோ, தயாரித்து நோயாளிக்கு கொடுக்கவோ அல்லது விற்கவோ கூடாது, அல்லது காப்புரிமை பெற்றவனுக்கு கப்பம் கட்டிவிட்டு அவனது உரிமையைப் பெற்று உற்பத்தி செய்யவோ விற்கவோ வேண்டும். இத்தகைய காப்புரிமைகள் பெறுவதற்கு நிபந்தனைகள் உண்டா? எனில் உண்டு. அவை

1.கண்டுபிடிப்பில் புதுமை இருக்க வேண்டும்.

2.இல்லாததைக் கண்டுபிடித்திருக்க வேண்டும்.

3.ஆலைத் தொழிலில் பெருவீத உற்பத்திக்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும்.

இந்த மூன்றாவது நிபந்தனை மூலம் காலங்காலமாக மூலிகைகளைக் கண்டறிந்து, மருந்து தயாரித்து, உட்கொள்ளும் வகையறிந்த சித்தர்களுக்கும், நாட்டு மருத்துவர்க்கும், அன்னையர்க்கும் அறிவுச் சொத்தில் உரிமை இல்லை என ஆக்கிவிட்டார்கள். அடுத்தபடியாக அறிவுச் சொத்துரிமை

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

என்பது தனிமனிதர்களுக்கும், கம்பெனிகளுக்கும் மட்டுமே உரியது என்று வரையறுத்துவிட்டார்கள். (நமது மூலிகை மருந்துகள் மிகப்பல காலகட்டங்களில் மிகப்பலரால் மேம்படுத்தப்பட்டவை). இந்த சமூகத்திற்குப் பங்கு இல்லை என்றும் வரையறை செய்துவிட்டார்கள். இப்படியாக சமுதாயத்தின் பொதுச் சொத்தை (அறிவையும், செல்வத்தையும்) கம்பெனிகளின் தனிச் சொத்தாக்கிக் கொள்வதற்காகப் பணக்கார நாடுகள் போட்டுகொண்ட சட்டம் தான் "தனிமனித அறிவுச் சொத்துரிமைச் சட்டம்".

இந்தச் சட்டத்தை அவர்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்? நமது மூலிகைகள், அவற்றின் மருத்துவக் குணங்கள், மருந்து தயாரிக்கும் முறைகள் அனைத்தும் ஆங்கிலத்தில் புத்தகங்களாக்கப்பட்டு தலைநகர் டெல்லியிலும் பிற நகரங்களிலும் விற்பனைக்குக் கிடைக்கின்றன. இந்தப் புத்தகங்களை வாங்கிப் போய் சம்பந்தப்பட்ட பக்கங்களைப் படியெடுத்து, தங்களின் ஆராய்ச்சிக் கண்டிபிடிப்பாகக் கூறி காப்புரிமை பெறுகிறார்கள். இதில் அவர்களுக்கான ஆதாயம் என்ன?

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

நோய்களின் வேர் அறுப்பது மூலிகை மருத்துவம். நோய்க்கான அறிகுறிகளை நீக்குவது அல்லோபதி மருத்துவம். அதுமட்டுமல்ல ஐம்பதுக்கும் மேற்பட்ட நோய்களுக்கு அவர்களிடம் சிகிச்சையே கிடையாது. இத்தகைய சூழ்நிலையில் பைசா செலவில்லாமல், கால விரயமில்லாமல், வாணிபத்தில் போட்டியே இல்லாமல் மருந்து தயாரித்து விற்க முடியுமானால் கோடி கோடியாக இலாபம் குவிக்க முடியும்.

மற்றொன்றையும் பார்ப்போம். காப்புரிமை வழங்கும் அலுவலகம் ஒன்று அமெரிக்காவில் உள்ளது. மற்றொன்று ஐரோப்பாவில் உள்ளது. காப்புரிமை அலுவலகத்துக்கு வந்த விண்ணப்பத்தைப் பரீசிலனை செய்து காப்புரிமை வழங்கிவிட்டாலும் மறுப்பு தெரிவிக்கலாம். காப்புரிமை வழங்கிய தேதியில் இருந்து ஓர் ஆண்டிற்குள் மறுப்பு அறிக்கையைப் பணம் கட்டிப் பதிவு செய்யவேண்டும். ஒரு ஆள் ஐரோப்பிய காப்புரிமை அலுவலகத்திற்குப் போய் வருவதற்கு ரயில் செலவும், விமானக் கட்டணமும் மட்டுமே 60,000 ரூபாய். கம்பெனிகளின் திருட்டுக்கெல்லாம் யார் போய் மறுப்பு தெரிவிப்பது. இப்படிப்பட்ட வசதியான சூழலில் மூலிகைத் திருட்டுக்கு வசதி செய்துகொண்டார்கள்.

எந்தெந்த மூலிகை மீதெல்லாம் காப்புரிமை பெற்றுள்ளார்கள்? நமது மஞ்சள், இஞ்சி, மிளகு, மணத்தக்காளி, சோற்றுகற்றாழை, நாவல், பாகற்காய், அமுக்கரா, பப்பாளி இப்படி முப்பது வகை மூலிகைகள் மீது இதுவரை காப்புரிமை வாங்கியுள்ளார்கள். வேம்பு பொருள்களில் மட்டும் 40 கம்பெனிகள் காப்புரிமை கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். கி.பி.2000 ஆண்டின் கணக்குப்படி 12 கம்பெனிகள் காப்புரிமை பெற்றுவிட்டன. சொல்வது என்ன? செய்வது என்ன? தொழில் வளர்ச்சியடைந்தால் மக்களுக்கு நன்மை, நாடு செழிக்கும் என்று பேசுகிறார்கள். ஆனால் பயன்பாட்டில் உள்ள மருந்துகளை மருத்துவர்களும், மக்களும் பயன்படுத்த முடியாமல் செய்வதற்கு சட்டம் கொண்டு வருகிறார்கள்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இவர்களது கண்டுபிடிப்புகளின் தன்மை எப்படிப்பட்டதாக இருக்கிறது? மஞ்சள் தீப்புண்ணை ஆற்றும், உள்ரணங்களைக் குணப்படுத்தும் என்று கொள்ளுப்பாட்டி கைப்பிடித்து வந்த மருத்துவத்தைப் புதிதாக கண்டுபிடித்ததாகச் சொல்கிறார்கள். இப்படித்தான் சோற்றுக் கற்றாழை வயிற்றுப் புண்ணை ஆற்றும் என்பதை கண்டுபிடித்து விட்டார்களாம்! வேப்பெண்ணைக் குடும்பக் கட்டுப்பாட்டுக்குப் பயன்படும் என்று கண்டுபிடித்து விட்டதாகவும் சொல்லுகிறார்கள்! வேடிக்கையாக இல்லையா? "கெட்டிக்காரன் திருட்டு எட்டு நாளில் தெரியும்" என்பது பழமொழி. மஞ்சள், பாசுமதி, வேம்பு ஆகியவற்றின் காப்புரிமை பற்றிய வழக்குகளில் கம்பெனிகளின் திருட்டுத்தனம் வெளிச்சத்துக்கு வந்தது. எடுத்துக்காட்டுக்கு வேம்பு மீதான காப்புரிமை வழக்கைக் கொஞ்சம் அலசுவோம். உலகம் முழுவதும் பூச்சிக்கொல்லி என்ற பெயரில் ஆட்கொல்லி நஞ்சுகளை வரம்பு கடந்து உற்பத்தி செய்து விற்றுப் பணம் திரட்டினார்கள். அந்தப் பூச்சிக்கொல்லி நஞ்சுகள் மனிதர்க்குப் புற்றுநோய் முதலாக மலட்டுத்தன்மை ஈறாகப் பலவித நோய்களைத் தோற்றுவித்தன. நீர், நிலம், நெருப்பு, காற்று மண் என்று சூழலை நஞ்சாக்கி உயிரினப் பன்மயத்தினை அழித்தன. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் மக்கள் பூச்சிக்கொல்லிக்கு கடுமையான எதிர்ப்பைக் காட்டினார்கள். இத்தகைய சூழ்நிலையில் மருந்தாகக்கூடிய வேப்பங்கொட்டைச் சாற்றில் பூச்சிக்கொல்லி தயாரித்து விற்றால் கோடி கோடியாக லாபம் குவிக்கலாம். இது **டபிள்யூ.ஆர்.கிரேசு** கம்பெனியின் திட்டம், இந்தக் கம்பெனி அமெரிக்காவில் மூன்றாவது பெரிய கம்பெனி. இந்தக் கம்பெனி, வேப்பங் கொட்டைச் சாற்றைச் செடி மீது தெளித்தால் பூஞ்சான நோய் கட்டுப்படுகிறது. இதற்கு மருந்து தயாரிக்கப் போகிறோம் என்று அமெரிக்காவில் ஒரு காப்புரிமையும், ஐரோப்பாவில் ஒரு காப்புரிமையும் வாங்கிவிட்டது.

டபிள்யூ.ஆர்.கிரேசு கம்பெனி 1995ல் வாங்கிய காப்புரிமையை எதிர்த்து டெல்லியில் உள்ள அறிவியல், உயிர்ச்சூழலியல் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவி வந்தனாசிவாவும், ஜெர்மனியில் உள்ள அனைத்துலக இயற்கை வழிப் பண்ணையக் கழகத்தின் செயலாளரும் வழக்கு தொடுத்தார்கள். இந்த வழக்கு ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஜெர்மானிய நாட்டில் உள்ள மியூனிச் நகரத்தில் உள்ள ஐரோப்பிய காப்புரிமை அலுவலகத்தில் விசாரணைக்கு வந்தது. கி.பி.2000, மே திங்கள் 9,10 தேதிகளில் விசாரணை நடந்தது, இந்தியாவில் இருந்து போன குழுவில் நானும் ஒருவன்.

வழக்கு விசாரணைக்குப் போகும் முன்பு நமது வேம்பைப் பற்றிப் பார்ப்போம். குச்சி பல் துலக்கவும், கொழுந்து புழு நீக்கவும், எண்ணெய், பேன், ஈறு கொல்லவும் பயன்படுகிறது. ஈர்க்கு கசாயம், பித்தம் தணிக்கிறது. பட்டை நாள்பட்ட காய்ச்சலைக் குணப்படுத்துகிறது. மனித உடலில் மட்டும் தான் என்றில்லை. மாடுகள், ஆடுகள், பூனை, நாய் உடம்பில் கூட நோய் உயிரிகளைக் கொன்று உயிர்காக்கிறது வேம்பு. வேப்பங்கொட்டையைச் சுட்டு அதன் புகையை உறிஞ்சினால் வைரஸ் கட்டுப்படுகிறது. வேப்பமரக் கட்டையில் கலப்பை செய்து நிலத்தை உழுதால் பாசி மட்டுப்படுகிறது. வேப்பம்புண்ணாக்கை நிலத்தில் இட்டால் பூச்சி நோய் கட்டுப்பட்டு, பயிர்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தேக்கமின்றி வளர்கிறது. வேப்பங்கொட்டையைப் பொடி செய்து உழவுச் சாலில் போட்டே நமது உழவர்கள் பூச்சி நோயை ஒழித்து நல்ல விளைச்சல் எடுக்கிறார்கள். இப்படியாக பயிர் மருத்துவத்தில், கால்நடை மருத்துவத்தில், மனித மருத்துவத்தில் வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டு உழவர்கள் நோயைக் கட்டுப்படுத்த வேம்புப் பொருள்களைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். வேப்பமர இலைச்சாற்றில் தேள் கொட்டிய நஞ்சு இறங்கும்; அம்மை நோய் இறங்கும்; இது ஒருபுறம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் வேப்பெண்ணெயை விளக்கில் ஊற்றி எரிக்கிறார்கள். வேப்பங்கொட்டையைக் கம்பெனி வாரிக் கொண்டு போனால் எங்களது வாழ்க்கை இருண்டு போகும். ஆதலால், "டபிள்யூ.ஆர்.கிரேசு கம்பெனியின் கண்டுபிடிப்பில் புதுமை எதுவும் இல்லை என்பது மட்டுமல்ல. காப்புரிமை பெற்றதன் மூலம் எங்கள் பொருளை மட்டுமல்ல, எங்களது பாரம்பரிய அறிவையும் திருடுகிறது" என்று எழுதி காப்புரிமை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

மறுப்பை அனுப்பிய கையோடு உள்நாட்டில் விசாரணையும் தொடங்கினோம். மும்பாயில் ஒரு பெரிய நிலக்கிழார் குடும்பம். எத்தனை விருந்தாளிகள் வந்தாலும் தங்கி, உண்டு, உறங்கி, ஓய்வு கொண்டு போகலாம். 1990 ஆம் ஆண்டை ஒட்டி ஒரு அமெரிக்க மரவியாபாரி மும்பாய் வந்தான். மேலே சொன்ன முகவரியில் தங்கினான். வேப்ப மரத்தடியில் படுத்து தூங்கினான். காலையில் எழுந்தவன் வியப்போடு கேட்டான். "ஏது இரவு கொசு கடிக்கவே இல்லையே". வீட்டுக்காரர்கள் பதில் சொன்னார்கள், "கொசு என்ன எங்கள் வேம்பு பேயையே ஓட்டும்!" வியப்பெய்திய மரவியாபாரி நாடு திரும்பும் போது ஒரு கைப்பிடி வேப்பங்கொட்டையைக் கையோடு கொண்டு போனான்.

அமெரிக்கர்களிடம் கொடுத்துச் சோதிக்கச் சொன்னான். அந்த ஆய்வில் வேம்பு, பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்துவது கண்டறியப்பட்டது. அதைக் கண்டுபிடித்ததாகக் கூறி அமெரிக்காவில் ஒரு காப்புரிமையைப் பெற்றான். ஆனால் அவன் மருந்து தயாரிக்கவில்லை. மாறாக காப்புரிமையை டபிள்யூ.ஆர்.கிரேசு கம்பெனியிடம் விற்றுவிட்டான். இப்போது இந்தக் கம்பெனி அமெரிக்காவில் ஒன்றும், ஐரோப்பாவில் ஒன்றுமாக இரண்டு காப்புரிமைகளைப் பெற்றுவிட்டது. இவ்வாறு ஆகாய விமானத்தில் ஏறும் முன்பாகவே திருட்டு அப்பட்டமாக வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. இதையறிந்த ஐரோப்பிய நண்பர்கள் 25 பேர் எங்களோடு நீதிமன்றத்திற்குள் இருந்தார்கள்.

இதற்கு மேலும் ஒரு நிகழ்வு, தமிழ்நாடு வேளாண்துறையில் வேலை பார்த்து ஓய்வு பெற்ற ஒரு மராட்டியன் வேப்பங்கொட்டையில் மருந்து தயாரித்து விற்றுகொண்டிருந்தான். அவன் இதற்கு முன்னோடியாக 35 வயல்களில் பருத்தியிலும், திராட்சையிலும் அந்த மருந்தைத் தெளித்து வெற்றி கண்டிருந்தான். அவனுடைய கண்டுபிடிப்பைக் கேட்டு கிரேசு கம்பெனி எழுதிய கடிதத்தையே சாட்சியாக முன்வைத்தான். மூன்று நீதிபதிகளுக்கும் வியப்பு தாளவில்லை.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கம்பெனிக்காரரிடம் நீதிபதி கேட்டார்,

"உனது கண்டுபிடிப்பில் புதுமை என்ன?"

கம்பெனிக்காரன் சொன்னான்,

"இந்தியாவில் செக்கில் ஆட்டுகிறார்கள். நாங்கள் பெரிய அளவில் தயாரிக்கிறோம். அது வியாபார ரகசியம் சொல்ல முடியாது".

பம்பாய் சாட்சி சொன்னான்,

"எனக்குத் தெரியும். ஹெக்சேன் என்ற பெட்ரோலியப் பொருளில் கரைய விட்டு காய்ச்சி வடிக்கிறார்கள்".

நீதிபதி மீண்டும் கேட்கிறார்,

"புதுமை என்ன?"

கம்பெனிக்காரன் சொன்னான்,

"இந்தியாவில் செக்கில் ஆட்டும்போது குறைவாக எண்ணெய் கிடைக்கிறது. எங்கள் முறையில் கூடுதலாக எண்ணெய் கிடைக்கிறது."

நமக்காக வாதாடிய ஜெர்மன் வக்கீல் பொதுமையமாகக் கேட்டார்,

" 'அ' வைக் கண்டுபிடித்தால் புதுமை. அ,ஆ,இ,ஈ கண்டுபிடித்த பிறகு 'உ' வைக் கண்டுபிடிப்பதில் ஏது புதுமை?"

இதைக்கேட்ட பிறகு நீதிபதிகளுக்கு தெளிவு ஏற்பட்டது.

மே 10 பிற்பகல் அவை கூடியபோது நீதிபதிகள் கேட்டார்கள்,

"இன்னுமொரு சாட்சி (காசி நகரப் பேராசிரியர்) விசாரிக்கப்பட வேண்டியுள்ளது. விசாரணையை இன்னும் ஒருநாள் நீட்டலாமா?"

கம்பெனிக்காரன் சொன்னான்,

"நாளை எனக்கு இன்னொரு வேலை இருக்கிறது."

உடனே நீதிபதிகள் சொன்னார்கள்,

"கம்பெனிக்குக் கொடுத்த உரிமை திரும்பப் பெறப்பட்டது (Patent revoked)."

உடனே நீதிமன்றத்தில் கூடியிருந்த வேம்பின் காப்பாளர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரித்தனர்.

கட்டுரையை முடிப்பதற்கு முன் மற்றொன்றையும் கூறவேண்டியுள்ளது. "வேப்பமரம் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் மட்டுமே வளர்கிறது. நாங்கள் தாராளமனம் கொண்டவர்கள். எல்லோருக்கும் விதை கொடுத்தோம். ஆனால் வேறு எங்கும் வளரவில்லை. இந்தக் காப்புரிமை மூலம் எங்கள் பொருள் மட்டுமல்ல, அறிவும் களவு போகிறது" என்று எழுதி 5 லட்சம் பேரிடம் கையொப்பம் பெறப்பட்ட ஆவணங்களை நீதிபதியிடம் ஒப்படைத்தோம்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

ஒரு ஜெர்மன் நாட்டு நண்பர் ஒரு குறுவேப்பமரத்தைக் கொண்டுவந்திருந்தார் (துருக்கி வேம்பு). அதைக் காப்புரிமை அலுவலகம் முன்பாக நட்டுவைத்தோம். வேம்பின் மீது பெறப்பட்ட 12 காப்புரிமை எண்களையும் எழுதி மரத்தில் தொங்கவிட்டோம். பின் ஒவ்வொரு எண்ணையும் ஒவ்வொருவராக வெட்டினோம். அப்போது முழங்கினோம், "சுதந்தர மரத்தை விடுதலை செய்வோம்!" என்று. ஆம், வேம்பின் லத்தீன் பெயர் "அசாடிரேக்டா", அதன் பாரசீக மூலம் "ஆசாத்தரக்த்" அதாவது "சுதந்தர மரம்". நாங்கள் அணிந்திருந்த பனியன்களில் எழுதியிருந்தது, "சுதந்தரமரத்தை விடுதலை செய்!"என்று.

இன்னொரு முக்கிய செய்தி, மே 8ஆம் நாள் மாணவச் செய்தியாளர்களைச் சந்தித்தோம். அனைத்தையும் கேட்ட ஒரு பத்திரிக்கையாளர் கேட்டார்,

"உங்கள் கட்சி தோற்றுப்போயிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?"

நான் சொன்னேன்,

"இந்த வெற்றியும், தோல்வியும் என்னை பாதிக்காது. என் தாய்நாடு போய் மக்களிடம் சொல்லுவேன், கம்பெனிக்கு வேப்பங்கொட்டை கொடுக்காதே!"

பத்திரிக்கையாளர் சொன்னார்,

"இந்த பதிலைத்தான் எதிர்பார்த்தேன்"

ஒரு எச்சரிக்கை:

கர்நாடகாவில் உள்ள ஒரு கம்பெனியின் பெயர் P.J.மார்கோசு. இது அமெரிக்க கிரேசு கம்பெனியின் ஏஜென்டு. இதற்கு ஆலை கட்டிக்கொடுத்ததே கிரேசு தான். P.J.மார்கோசு முழு அளவில் வேலை செய்தால் ஒரு நாளைக்கு 25 குவின்டால் கொட்டையை நசுக்கிப் பிழிந்து அமெரிக்காவுக்கு அனுப்பும் திறன் கொண்டது.

தாயகமே! தமிழகமே! உறங்கியது போதும்! விழித்தெழு! வீறுகொள்!

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

போன்:25581001, 25571508, 25571098

ஜி.கே. மருத்துவமனை

ஜி.கே.சித்தா மூலிகை மருத்துவம் ஆராய்ச்சி மற்றும் அறக்கட்டளை

மக்கள் நல மருத்துவர்



Dr.கி.குணசேகரன்.B.I.M

சிகிச்சை அளிக்கப்படும் நோய்கள்

பக்கவாதம்	கல்லடைப்பு
என்பு மற்றும் மூட்டுவலி	காமாலை, மூலம்
குடற்புண்	இளம்பிள்ளை வாதம்
இரத்த அழுத்தம்	மாதவிடாய்கோளாறுகள்
தோல் நோய்கள்	இரைப்பு
சர்க்கரை நோய்	எல்லாவித புற்றுநோய்கள்

சிறப்பு சிகிச்சைகள்

இயன்முறை மருத்துவம்	உடல் பருமன் குறைத்தல்
தொக்கணம்	மூலிகை நீராவிக்குளியல்
நவரக்கிழி	எண்ணெய்க் குளியல்
பிழிச்சல்	என்பு முறிவு சிகிச்சை
தாரா	யோகா

ஜி.கே. மருத்துவமனை

ப்ளாட்.எண்.177, Z.ப்ளாக், கதவு எண் 62/C, முதல் தளம் 5ம் அவென்யூ, அண்ணா நகர், சென்னை-40.

39 (பழைய எண்-302), பேப்பர் மில்ஸ் ரோடு, பெரம்பூர், சென்னை-11.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

CELEBRATE ROTARY 100 Years

Best Wishes

ROTARY INTERNATIONAL

Rtn.Gomathi Sanker

Centennial President 2004 - 2005
Rotary Club of Tirunelveli Town
Meenakshipuram, Tirunelveli - 627001

Our sincere thanks to

MKM Jewellers

Tirunelveli Town

By 40th year Students Union GSMC Palay

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சித்தர்கள்

சித்தர்கள் என்போர் தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கிய ஒரு கூட்டத்தாராவர். 'சித்து வேலை அறிந்தவர்கள்' என்பது இந்த சொல்லுக்குப் பொருள். நீரிலும் நெருப்பிலும் காற்றிலும் நடப்பது, குளித்தல் மற்றும் உணவு உடைத் தேவைகளைப் பொருட்படுத்தாமல் வாழ்வது, ஒரு பொருளை இன்னொரு பொருளாக மாற்றுவது, துறவிகளாகவும், எதற்கும் கட்டுபடாதவர்களாகவும் வாழ்வது, தேவைக்கேற்ப உடலை உருமாற்றிக் கொள்வது முதலியன சித்தர்கள் செய்துகாட்டும் வேலைகளாகும்.

கிராமப்புறங்களில் இன்றுவரை ஆங்காங்கு வாழ்ந்த சித்தர்களைப் பற்றி நூற்றுக்கணக்கான கதைகள் வழங்கி வருகின்றன. பெரும்பாலான இடங்களில் சித்தர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடம் கோயில் ஆக்கப்பட்டிருக்கிறது. நாட்டுப்புற மக்களிடையே சித்தர்கள் மரியாதைக்குரியவர்களாக விளங்கியதற்குக் காரணம் அவர்களின் பற்றற்ற வாழ்க்கையும், அவர்களின் மருத்துவ அறிவும் ஆகும். மண்ணையும் மருந்தாக மாற்றும் வல்லமை சித்தர்களுக்கு உண்டு என்பது மக்களின் நம்பிக்கை. செல்வத்திற்கும் அதிகாரத்திற்கும் கட்டுப்படாத அவர்களது வாழ்க்கை எளிய மக்களின் உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் விடுதலை உணர்வுக்கு வடிகாலாக விளங்கியது.

சித்தர் பாடல்கள் என்று வழங்கும் பாடல்களின் எண்ணிக்கை பல்லாயிரம் இருக்கும். கடந்த நூற்றாண்டில் அச்சு எந்திரங்களின் வருகையோடு செவிவழியாக வழங்கிய பாடல்களையெல்லாம் அச்சிலேற்றிப் 'பதினெண் சித்தர்பாடல்கள்' என்று பெயர் கொடுத்தனர். அது முதலாக 'சித்தர் என்போர் பதினெட்டுப் பேர்' என்ற தவறான கணக்கு மக்கள் மனதில் பதிந்து போனது. உண்மையில் நூற்றுக்கு மேற்பட்ட சித்தர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். சித்தர்களின் பாடல்களைப் படிக்கும்போது அவர்களில் நான்கைந்து பிரிவினர் இருந்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது.

சித்தர்களின் பாடல்களில் சில மருத்துவப் பாடல்கள். இந்தப் பாடல்களின் பல சொற்கள் குறியீடாக (பரிபாஷையாக) அமைந்திருக்கின்றன. சில பாடல்கள் மருந்துப் பொருள்களின் பெயரைச் சொல்கின்றன. 'முப்பூ', 'குரு' என இப்பாடல்களில் வரும் சொற்களுக்குச் சிலர் மனம் போன படியெல்லாம் பொருள் விளக்கம் தந்துகொண்டிருக்கிறார்கள். இந்த வகை சித்தர்களில் சிலர் இரும்பைப் பொன்னாக்கும் (ரசவாதம்) வேலைகளில் மறைவாக ஈடுபட்டிருந்திருக்கின்றனர். இந்த வகையான முயற்சி கடந்த நூற்றாண்டுகளில் உலகெங்கிலும் நடந்திருக்கிறது. இன்னொரு வகைச் சித்தர்கள், 'உலகம் நிலையில்லாதது' என்னும் கொள்கையோடு ஆன்மீகத் தேட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இசுலாமிய படையெடுப்பின் போது கஞ்சா புகைக்கும் பழக்கமும், அபினி உண்ணும் வழக்கமும் அறிமுகமாயின. இவற்றில் லயித்துக்கிடந்த சிலரையும் மக்கள் சித்தர் என்ற கணக்கில் அடக்கியிருக்கிறார்கள்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சித்தர்களின் மற்றொரு வகையினர் சிலை வழிபாடு, பூசனை, பார்ப்பனர், புனிதமாகக் கருதப்பட்ட வேதம், கோயில், குளம், சாதிய ஒடுக்குமுறை என எல்லா வகை நிறுவனங்களையும் எதிர்த்துக் கலகக்குரல் எழுப்பி இருக்கின்றனர். பொதுவாகச் சித்தர் பாடல்களில் இந்தக் கலகக்குரலே ஓங்கி ஒலிக்கிறது.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசின் வீழ்ச்சிக் காலத்தில் தான் இந்தக் கலக மரபு தொடங்கியது. அரசும், கோயிலும், நிலமும் பார்ப்பனர்வசம் இருந்தன. பார்ப்பனர்க்கும் வேளாளர்க்குமான முரண்பாடுகள் முற்றிப்போய் வேளாளர்கள் தங்களுக்கெனச் சைவ மடங்களைத் தொடங்கினர், நிலத்தை அடிப்படையாகக் கொண்ட மனித உறவுகள் சீரழியத் தொடங்கின. அதனால்தான் கலக மரபுக்காரர்கள் பார்ப்பனர்களையும் வேதத்தையும் மட்டுமல்லாது கோயில்களையும் எதிர்த்து நின்றனர்.

"சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே
வேர்ப்பு இரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமா?"
"குலம் குலம் என்பதெல்லாம் குடுமியும் நூலும்தானா?"
"கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா"

முதலிய பாடல்களை மேற்குறித்த பின்னணியில்தான் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சித்தர் பாடல்களுக்குப் பொதுவாகக் காலவரையறை இல்லை. இவை அனைத்தும் கி.பி. 13ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை என்பது மட்டும் உறுதி. பாம்பாட்டிச்சித்தர், குதம்பைச்சித்தர், சிவவாக்கியர் ஆகியோர் பாடல்களே எழுத்தறிவு பெறாத எளிய மக்களின் நடுவில் செல்வாக்கு பெற்றுள்ளன. பதினெண் சித்தர் பாடல்களில் சேர்க்கப் பெறாத பாய்ச்சலூர்ப் பதிகம் எனும் பத்து பாடல்களை எடுத்துக்காட்டும் மு.அருணாசலம் அதன் காலத்தைக் கி.பி. 14ம் நூற்றாண்டு என வரையறை செய்கிறார்.

இசுலாமிய சமயத்திலும் ஒரு சித்தர் மரபு உண்டு. இந்த சித்தர்களை 'சூஃபிகள்' என்று குறிப்பிடுவர்.இந்த சூஃபி மரபு கி.பி. 16ம் நூற்றாண்டில் பாக்தாதில் பிறந்ததாகும்.தமிழ்நாட்டிலும் இவ்வகையான சூஃபிகள் வாழ்ந்து பாடல்கள் இயற்றியுள்ளனர்.நெல்லை மாவட்டத்தில் காலங்குடியிருப்பு மச்சரேகைச் சித்தர், குமரி மாவட்டத்தில் தக்கலை பீர் முகம்மது வாப்பா, முகவை மாவட்டத்தில் இளையான்குடி கச்சிப்பிள்ளையம்மாள், கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த குணங்குடி மஸ்தான் சாகிபு ஆகியோர் இசுலாமிய சூஃபி மரபைச் சார்ந்தவராவர். பதினெண் சித்தர்களில் ஒருவரான கம்பளிச் சட்டை முனிவரை சூஃபி என்று சிலர் குறிப்பிடுவர். 'சூஃப்' என்ற அரபுச் சொல்லுக்குக் கம்பளி சட்டை என்றே பொருளாம்.

தமிழ்நாட்டு வைணவத்தில் சாதிய இறுக்கத்தை இராமனுசர் தளர்த்தி வைத்திருந்ததினால்தான் வைணவத்தில் சித்தர் மரபு தோன்றவில்லை என்று எண்ண இடம் உண்டு.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சித்தர்கள் மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றதற்குக் காரணங்கள் சில உண்டு. சித்தர்களின் குரல் பெரும்பாலும் சாதியாலும், சமயத்தாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக இருந்தது. சித்தர்கள் அதிகாரங்களுக்கு கட்டுப்படாதவர்களாக இருந்தார்கள். அவர்களின் பாடல்கள் எழுத்தறிவில்லாத மக்கள் மனப்பாடம் செய்யுமளவுக்கு அவர்களது மொழியில் அமைந்திருந்தன.

வடநாட்டில் இடைக்காலத்தில் "நாதசித்தர்" என்ற ஒரு மரபு தோன்றியது. இந்த மரபு தமிழ்நாட்டுச் சைவ மரபுகளுக்கு உள்ளாக ஊடுருவியது. சைவ மடாதிபதிகள் " ஸ்ரீலஸ்ரீ " என்ற பட்டம் இட்டுக் கொள்வது. "ஸ்ரீலட்சாயதஸ்ரீ" என்பதன் சுருக்கமாகும். "லட்சாயத" என்பது வடநாட்டின் நாத சித்தர் மரபின் தலைமையிடமாகும். இதன் விளைவாகவே குருமார்களை அடக்கம் செய்த இடத்தில் கோயில் கட்டிக் "குருபூசை" செய்யும் மரபும் தமிழ்ச் சைவத்தில் இடம்பெற்றது.

– தொ. பரமசிவன்

"பண்பாட்டு அசைவுகள்" நூலிலிருந்து.

(நன்றி – காலச்சுவடு பதிப்பகம்)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இலங்கையில் சித்த மருத்துவம்

சித்த மருத்துவ கலாநிதி மரு. S.சிவசண்முக ராஜா B.S.M.S (SRI LANKA) M.D.(s) (INDIA)
முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சித்த மருத்துவம் சிவத்தை மூலமாகக் கொண்டது. சிவம் என்பதற்கு ஆழமான உட்பொருள் உண்டு. "தென்னாடுடைய சிவனே போற்றி" என்கிறோம். இங்கு தென்னாடு என்பது தமிழ்நாடு, கேரளம் போன்றவற்றை மட்டுமன்றி அவற்றிற்கும் தெற்கில் கடல் கடந்து நிற்கும் இலங்கையையும் சுட்டி நிற்கிறது. சித்தரில் முதல்வரான திருமூலர் இலங்கையைச் "சிவபூமி" என்று தமது திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விலங்கையை அரசாண்ட இராவணன் மிகப்பெரிய சிவபக்தன். அது மட்டுமன்றி மிகச்சிறந்த வைத்தியனாகவும் விளங்கியுள்ளான். குறிப்பாக, பிள்ளைப்பிணி மருத்துவத்தில் அவன் சிறந்து விளங்கியுள்ளான். அது பற்றி இராவணனால் ஒரு மருத்துவநூல் இயற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இராம இராவண யுத்தத்தில் இராமலக்குமணர்கள் மூர்ச்சையடைந்திருந்த வேளையில், சஞ்சீவி மூலிகை இருந்தால் மட்டுமே அவர்கள் பிழைத்தெழ முடியும் என்று எடுத்துக் கூறியவன் இராவணனுடைய ஆஸ்தான மருத்துவனாவான். அதன் பின்பே ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை எடுத்து வந்ததாக இராமாயணம் கூறியுள்ளது.

அநுமன் சஞ்சீவி மலையை இலங்கைக்கு எடுத்து வந்தபோது அதிலிருந்த மூலிகைகள் இலங்கையின் பலபாகங்களிலும் விழுந்து பரவின. அதனால்தான் இலங்கை மூலிகைவளம் மிக்க ஒரு தீவாக இன்றும் விளங்குகிறது. குறிப்பாக கதிர்காமத்துக்கு அருகில் மூலிகை மலை ஒன்றுள்ளது. இது 'மூலிகைக்கந்த' என்று சிங்களத்தில் அழைக்கப்படுகிறது. இதில் பல அபூர்வ மூலிகைகள் உள்ளன. சஞ்சீவி மலையின் ஒரு சிறிய பாகமே இம்மூலிகை மலை என்று கருதப்படுகிறது.

இலங்கையின் சித்தமருத்துவ வரலாற்றில் கதிர்காமம் என்று அழைக்கப்படும் கதிரமலைக்கு முக்கிய இடம் உண்டு. தமிழ்நாட்டில் சித்தர்கள் பொதிகைமலையை தமது புண்ணிய வாசஸ்தலமாகக் கொண்டு சித்தமருத்துவத்தை வளர்த்தது போல இலங்கையில் கதிரமலையை தமது புண்ணிய வாசஸ்தலமாகக் கொண்டு சித்தமருத்துவத்தை வளர்த்துள்ளார்கள். பழநிமலையில் நவபாடாணங்களைக் கட்டி முருகன் சிலையை தோற்றுவித்த போகநாதர் என்ற சித்தரே கதிர்காமத்தில் முருக யந்திரத்தையும் அமைத்துள்ளார். (கதிர்காமம் கோவிலில் மூலவிக்கிரகம் எதுவும் இல்லை. திரைச்சீலையால் மறைக்கப்பட்டுள்ள முருகயந்திரத்துக்கே பூஜை முதலியன நடைபெறுவதாகக் கருதப்படுகிறது). கதிர்காமம் ஆலயத்தில் அருட் பொலிவுக்கு இம்மூலயந்திரமே காரணமாகும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கதிர்காமம் மூலிகை வளம் மிக்க ஒரு பூமியாகும். இங்குள்ள கடைகளில் பல அபூர்வ மூலிகைகள் விற்பனை செய்யப்படுவதை தற்போதும் காணலாம். இலங்கையில் வெளிவந்த மிகப்பெரிய சித்தமருத்துவ நூலான பரராசசேகரத்தில், கதிரமலை பற்றிய குறிப்புகள் பல இடங்களிலும் காணப்படுகின்றன.

எனவே, கதிர்காமத்தை மையமாகக் கொண்டு ஒரு காலத்தில் இலங்கை முழுவதும் சித்த மருத்துவம் பரவியிருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் தமிழ் மக்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் செறிந்து வாழ ஆரம்பித்த போது சித்த மருத்துவமும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இலங்கையின் சித்தமருத்துவ வரலாற்றை எழுதுபவர்கள் சித்தமருத்துவமானது அதன் தனித்துவத்துடனும், தூயநிலைகளிலும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பேணப்பட்டு வருவதாக குறிப்பிடுவது வழக்கம்.

